Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 11 புதன்கிழமை (24.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 206











# மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுப்பதே எமது இலக்கு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் உரிமையை வென்றெடுப்பதன் மூலம் மக்களுக்கான இயல்பு வாழ்க்கையை மேலும் வளமானதாக மாற்றிக்கொள்ள முடியும். எனவே தான் நாம் எமது மக்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுக்கும் உன்னத இலக்குடன் எமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகிறோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சரின் யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபை என்பது எமது இலட்சியக் கனவு என்பது மட்டுமல்லாமல் அதனூடாக யுத்தத்தால் அழிவடைந்த எமது பகுதியை மீளக்கட்டியெழுப்ப முடியுமென்ற நம்பிக்கையும் எமக்குள்ளது.

அத்துடன், எமது மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலை காணப்படும் அதேவேளை, அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பது மட்டுமல்லாமல் அரசியல் உரிமைகளை வென்றெடுத்து அதனூடாக மக்களின் இயல்பு வாழ்க்கையை பெற்றுக் கொடுப்பதும் எமது தலையாய கடமையாகவுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்குக் கயிற்றில் தொங்கி இறந்ததாகத் தெரிவிக்கப்படும் யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவரின் சடலம் நேற்று கோப்பாய் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் வர்த்தகப் பிரிவில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயின்றுவந்த இருபாலை கிழக்கு கோப்பாயைச் சேர்ந்த ஞானேந்திரன் பிரசாத் (வயது-24) என்ற மாணவனே இவ்வாறு தூக்குமாட்டி இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் தூக்குக் கயிற்றில் தொங்கிய அவரை மீட்டு ஆபத்தான நிலையில் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு மரணமாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வடக்கில் முஸ்லிம்களை தலையெடுக்க விடாமல் தடுக்கிறது கூட்டமைப்பு

(கொழும்பு)

வடக்கில் முஸ்லிம்களை தலையெடுக்க விடாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது என்றும், வடக்கில முஸ்லிம்கள் பூரணமாக மீள்குடியேற்றப்படாமல் மாகாண சபை தேர்தல் நடந்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம் என கைத்தொழில் மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களை பூரணமாக குடியேற்றாமல் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் வை.எல்.



எஸ்.ஹமீட் தெரிவித்தார். இதனால் முஸ்லிம்களை பூரணமாக

(19) ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு பார்த்துக்கொண்டிருக்காது



(கொழும்பு)

காணி சுவீகரிப்பைத் தொடர்ந்தும் நாம் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக கூட்டமைப்பு எதிர் நடவடிக்கையில் குதிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசினாலும், இராணுவத்தினராலும் நன்கு திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பு, மற்றும் சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் நடவடிக்கை எடுக்கும எனத் தெரிவித்துள்ளார். வடமாகாணசபை தேர்தலுக்கு முன்னதாக தனக்கு வேண்டியவற்றையெல்லாம் விழுங்கிவிட வேண்டும் என்ற அவாவில், அரசாங்கம்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடாளுமன்றில் நேற்று அமளிதுமளி

மின்சாரக் கட்டண உயர்விற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பியதனைத் தொடர்ந்து, நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டன. மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி உரையாற்றியதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## கச்சேரி வாயிலில் கண்டனப்போர்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனைத் தடுத்து நிறுத்தவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டனப் போராட்டம் ஒன்று இன்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ். செயலகத்தின் முன்பாக நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வலி. வடக்கில் காணி சுவீகரிப்பினால் பாதிக்கப்படவுள்ள பொதுமக்கள் தம்மை அணுகி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அந்தப் பகுதி மக்களையும் ஏனைய பகுதிகளிலும் காணி சுவீகரிப்பினால் பாதிக்கப்படும் மக்களையும் ஒன்றுசேர்த்து இந்தப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் ஊடக சுதந்திரம் கண்காணிக்க பிரித்தானியக் குழு

### அரசின் கதவடைப்புக்கு கண்டனம்

இலங்கையில் ஊடக சுதந்திரத்தைக் கண்காணிக்க பிரித்தானியாவின் நிபுணர்குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சர் அரிஸ்டர் பார்ச் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரித்தானியா ஏற்கனவே இலங்கையிடம் கோரியுள்ளது. ஊடகவியலாளர் பாதுகாப்பு மற்றும் கருத்து சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்த இலங்கையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பர்ட் தெரிவித்துள்ளார். இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து பிரித்தானியா



உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். பி.பி.சி. சர்வதேச ஊடகத்தின் ஒலிபரப்பு தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மாகாணத் தேர்தல்; தெற்கில் கிளம்பும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்துவது என்று அரசு எடுத்திருக்கும் முடிவுக்கு தெற்கில் எதிர்ப்பலை கிளம்பியிருக்கிறது. வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முடிவு செய்தாலும் தாம் அதற்கு ஒருபோதும் இணக்கம் தெரிவீக்கப் போவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல்

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத்துப் பெண்கள் வீதி விபத்துக்களில் சிக்குவதில்லை

## புருவத்தை உயர்த்தும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் பெண்கள் விபத்துக்களில் சிக்குவது மிகக் குறைவு என்று யாழ்.போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். நகரின் பிரதான சந்திகளிலேயே தற்சமயம் வீதி விபத்துக்களில் அதிகமானவை நடைபெறுகின்றன். பிரதான சந்திகளில் பயணிக்கும் போது உரிய போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றாமையே இவ்வாறு வீதி விபத்துக்கள் இடம்பெறக் காரணமாக அமைகின்றன. ஒரு நாற்சந்தி ஒன்றால் நான்கு பக்கமாகவும், வீதியில் வாகனங்கள் வந்து போகும் இந்த நிலையில் ஒரு வீதியில் பயணிப்பவர் ஏனைய வீதிகள் குறித்து அவதானிக்கத் தவறுவதே இப்படியான விபத்துக்களுக்குக் காரணமாக அமைகின்றது.

அத்துடன் கடந்த சனிக்கிழமை மடத்தடி சந்திப்பகுதியிலும் இவ்வாறு ஒரு விபத்து நடைபெற்றது. இந்த விபத்தில் பிரதான வீதியில் வந்து கொண்டிருந்த பயணிகள் மினிபஸ் வண்டியைக் கவனிக்காது போக்குவரத்து விதிகளை மீறி துவிச்சக்கர வண்டியில் இருவர் பயணித்த போது குறித்த பயணிகள பஸ் வண்டியில் மோதுண்டு படுகாயமடைந்து பின்னர் வைத்தியசாலையில் மரணமடைந்த சம்பவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு அண்மைக்காலமாக விபத்தில் சிக்கிக்கொள்பவர்கள் ஆண்களாகவே உள்ளனர். பெண்கள் விபத்தில் சிக்கிக் கொள்வது மிக மிகக் குறைவு என்றும் யாழ்.போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## 'மகா வித்துவான்' பட்டம் வழங்கி கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

முனைவர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் மணிவிழா கடந்த சனிக்கிழமையன்று நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மண்மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த விழாவில் மணிவிழாக் குழுவினரால் மணிவிழா நாயகருக்கு 'மகாவித்துவான்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இப்பட்டத்தினை வாகீச கலாநிதிக்கு மணிவிழாக் குழுவினருடன் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன் இணைந்து வழங்கினார் (60)

## தெரிந்தவர்போல் நாடகமாடி மூதாட்டியின் பொருட்கள் அபகரிப்பு

(கொடிகாமம்)

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த இ.போ.ச. பேருந்தில் மூதாட்டியின் பெறுமதிமிக்க உடுபுடவைகள் அபகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு வவுனியா பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து யாழ்.நோக்கி பயணித்த பேருந்தில் மூதாட்டியுடன் தான் வட்டக்கச்சி பயணம் செய்கின்றேன் என்று கூறி ஒருவர் பேருந்தில் ஏறியுள்ளார்.

பேருந்தில் ஏறியவுடன் மூதாட்டியின் கைப்பையை வேண்டி பின்பக்கச் சீற்றுக்கு கீழ் வைத்துள்ளார். மூதாட்டி பேருந்தின் நடுப்பகுதியில் சீற் இருந்ததனால் அங்கு அமர்ந்து விட்டார். முறிகண்டி வந்ததும் மூதாட்டி 55 ஆம் கட்டையில் இறங்குவதற்குத் தயாராகினார். அங்கு கைப்பை, வேண்டிய நபரைத் தேடினால் அவரைக் காணவில்லை. அந்த நபரோ கனகராயன் குளத்தில் இறங்கி விட்டார் என்று அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள்.

மூதாட்டி என்ன செய்வதென்று தெரியாது 55 ஆம் கட்டையில் இறங்கித் தனது வீட்டை நோக்கிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (130)

## பௌர்ணமி கலைவிழா

வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் பௌர்ணமி கலைவிழா நாளை முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மா.இராஜகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (04)

## இருவருக்கு டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய இருவர் நேற்று வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து தலா ஒவ்வொருவர் வீதம் இருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் நேற்று வரை 56 பேரும், இந்த வருடத்தில் இந்த எண்ணிக்கை 269 ஆகவும் அதிகரித்துள்ளது. (பா)

# திருட்டுக்களின் சூத்திரதாரி கைது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மற்றும் நல்லூர் பகுதிகளில் நடைபெற்ற நீர் மோட்டார் திருட்டுக்களின் சூத்திரதாரி யாழ்.குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து பத்து நீர் மோட்டார்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றுக் கைது செய்யப்பட்ட இவர், பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

விசாரணைகள் முடிவுற்றதும் இவர் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இவரால் திருடப்பட்ட மோட்டார்கள் கைப்பற்றப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (பா)

## பயணச்சீட்டுகள் வழங்காத தனியார் பேருந்துகள்

(கொடிகாமம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 பாதையில் கொழும்பு மற்றும் பிறபகுதிகளுக்குச் செல்லும் தனியார் பேருந்துகள் பயணச் சீட்டுக்கள் வழங்குவதில்லை எனப் பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். காலை வேளைகளில் பயணம் செய்யும் அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் எனப் பலரும் இப்பேருந்துகளை பயன்படுத்துகின்றனர்.

காலை வேளைகளில் சன நெரிசல்களைக் காரணம் காட்டிப் பயணச்சீட்டு வழங்காமல் இருப்பதுடன், அதிகரித்த கட்டணமும் அறவிடப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து பிரயாணிகளின் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். (130)

## வருடாந்த மஹோற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி கதிரிப்பாய் ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த சந்தீக அலங்கார உற்சவமானது எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.


ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வை. இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 7.00 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும்,

8 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 9 ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது.


இக்கண்ணகை அம்மனி[illegible] பூங்காவனத் திருவிழா வெகு விமரிசையாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகின்றது. இக்காட்சியைக் காண்பதற்கென்றே பக்த அடியார்கள் இங்கு கூடுவது குறிப்பிடத்தக்கது.

இப் பூங்காவனத் திருவிழாவை அடுத்து எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கிராம ஊர்வலம் இடம் பெற்று 11ஆம் திகதி வைரவர் பொங்கலுடன் திருவிழாக்கள் யாவும் இனிதே நிறைவு பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் ஆலய மண்டபத்தில் கலாநிதி பண்டிதர் க.வைத்தீஸ்வரக் குருக்களின் 'சைவக் களஞ்சியம்' நூல் வெளியீட்டு விழாவில் வருகை தந்த அறிஞர்கள் அமர்ந்திருப்பதையும், சைவக் களஞ்சிய நூலின் ஆய்வுரையினை கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு உரையாற்றுவதையும், நூலின் ஆசிரியர் கலாநிதி பண்டிதர் க.வைத்தீஸ்வரக் குருக்களிடமிருந்து முதற்பிரதியை தொழிலதிபர் இ.ச.பே. நாகரத்தினம் பெற்றுக் கொள்வதையும் காணலாம். (50)



சாவகச்சேரி கல்வயல் அருள் மிகு பூரணை புட்கலை சமேத ஹரிகரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் போது பிரதம குரு சுவாமிக்கு தீபாராதனை நிகழ்த்துவதையும், ஐயப்பசுவாமி உள்வீதியுலா வருவதையும் காணலாம். (43)

# குமிழமுனை கிராமத்திற்கு 3 தனியார் பேருந்துகள் சேவை

## - முல்லைத்தீவு மாவட்ட பேருந்து சங்க செயலாளர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள குமிழமுனை கிராமத்திற்கென 3 தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்க செயலாளர் பிரேமன் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறிய காலப்பகுதியிலிருந்து இப்பேருந்து சேவை இடம்பெற்று வருகின்றது.

குமிழமுனைக் கிராமத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்து காலை 5.30 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டு குமிழமுனைக் கிராமத்தினூடாக சேவையில் ஈடுபடுவதுடன், இறுதியாக பிற்பகல் 4.30 மணிக்கு குமிழமுனைக் கிராமத்தில் இரவு தங்கிநின்று மறுநாள் காலை 7 மணிக்கு குமிழமுனையிலிருந்து பாடசாலை மாணவர்களையும் மற்றும் அன்றாடத் தேவைகளை மேற்கொள்ளும் மக்களையும் ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவுக்கு வருகின்றது.

பின்னர் முல்லைத்தீவில் இருந்த புறப்பட்டு குமிழமுனைக்கு 11.30 மணிக்கு வரும் பேருந்து 1.30 மணிக்கு குமிழமுனையில் இருந்து முல்லைத்தீவுக்கான சேவையை மேற்கொள்கின்றது. பின்னர் முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டு குமிழ முனைக்கு வரும் பேருந்து 4.30 மணியுடன் குமிழமுனையில் தரித்துநின்று பின்னர் மறுநாள் வழமையான சேவையை மேற்கொண்டு வருகிறது.

இச்சேவையில் 3 பேருந்துகள் மாறி மாறி சேவையில் ஈடுபட்டு வருவதுடன், இதனால் குமிழமுனை கிராம மக்கள் சிரமமின்றி தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதைவிட முல்லைத்தீவில் இருந்து செம்மலையூடாக சேவையில் ஈடுபடும் பேருந்து குமிழமுனை கிராம மாணவர்களுக்காக அக்கிராமத்தினூடாக செல்வதாகவும், இதனால் பாடசாலை மாணவர்கள் பெரும் நன்மையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

# கலை இலக்கியவட்டத்தின் "முழுநிலா" கருத்தாடல்

(வவுனியா)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த 'முழுநிலா' கருத்தாடல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி அகளங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் மூத்த பொதுவுடமைவாதியும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட மூத்த உறுப்பினருமான இ.கா.கணபதிப்பிள்ளைக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், மாணிக்கம் ஜெகன் தலைமையில் கவி அளிக்கையும் இடம்பெறவுள்ளது.

இக் கவி அளிக்கையில் கவிஞர் குரும்பையூர் த. ஐங்கரன் தொடக்கக்கவிவடிக்க சி.நாகராஜா, த.தனசீலன், நா.தியாகராஜா, க.ஸ்ரீகந்தவேள், ப. அன்ரன், செல்வி து.நந்தீஸ்வரி, கஜரதி பாண்டித்துரை, த.பிரதாபன் ஆகியோர் கவி பாடவுள்ளனர்.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை ந.ஜெனன் வழங்க நன்றியுரையினை ச.அருண்மொழி வேந்தன் வழங்கவுள்ளார். (160)

# யாழ்.மத்திய கல்லூரி நடனப்பிரிவில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட்மட்ட தமிழ்த்தினப் போட்டியில் நடனத்துறையில் பிரிவு ஐந்திலும், ஆதிவாசிகள் குழு நடனத்திலும் யாழ்.மத்திய கல்லூரி முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டிற்கான மாவட்ட மட்ட தமிழ்த்திப் போட்டிகள் தெல்லிப்பழை மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியில் இருந்து நடனத்துறையில், பிரிவு ஐந்தில் போட்டியிட்ட க.கௌதமன் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அதேவேளை இப்பாடசாலையில் இருந்து ஆதிவாசிகள் குழு நடனத்திற்குத் தோற்றிய மாணவர்களும் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த ஆதிவாசிகள் நடனத்தை சி.அனுருத்தன் ஆசிரியர் நெறிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# புனரமைப்பு

(கொடிகாமம்)

நீண்டகாலமாக புனரமைக்கப்படாதிருந்து புத்தூர் நாகதம்பிரான் சந்தியில் இருந்து புளியங்குளம் வரையான அரைக்கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

சித்திரைப்புத்தாண்டை அண்மித்த நாட்களில் இவ்வீதி புனரமைக்கப்பட்டதுடன் காபற் இடப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது (130)

# வருடாந்த இரதோற்சவம்

(அச்சுவேலி)

இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இவ்உற்சவத்தில் இன்று புதன்கிழமை தேர்த்திருவிழாவும், நாளை தீர்த்தத்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுடன், சனிக்கிழமை வைரவர் சாந்தியுடன் திருவிழாக்கள் நிறைவுபெறவுள்ளன.

# வீடெரிந்த குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தமிழ் - முஸ்லிம் நல்லிணக்க அமைப்பினால் முள்ளியவளை மத்தி 2 ஆம் வட்டாரப் பகுதியில் வீடு எரிந்த நான்கு குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நேற்று முன்தினம் பிற்பகல் வழங்கப்பட்டுள்ளது.

நான்கு குடும்பங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பம், ஊனமுற்றோர் குடும்பம் உள்ளதுடன், இவர்கள் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ், பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருவதாகவும், இதனைக் கருதியே இப்பணம் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் செயலாளர் கமலநாதன் விஜிந்தன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கனகரத்தினம் ஆகியோர் நேரடியாக அம்மக்கள் வாழும் பிரதேசத்திற்குச் சென்று அவர்களுக்குப் பணத்தை வழங்கிவைத்தனர்.

இதேவேளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளையினரால் உணவல்லாத அத்தியாவசியப் பொருட்களும், நேற்று முன்தினம் இக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04, 125)

# வவுனியாவில் மாபெரும் மேதின ஊர்வலம்

(வவுனியா)

வவுனியாவில் உழைக்கும் வர்க்கத்தினது ஐக்கியப்பட்ட மாபெரும் மேதினமும், ஊர்வலமும் இடம்பெறவுள்ளதாக மேதின ஐக்கியப்பட்ட அமைப்புக்களின் ஒருங்கிணைப்பாளர் என். பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், எதிர்வரும் முதலாம் திகதி வவுனியாவில் உள்ள தொழிற்ச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், தொழிலாளர்கள் இணைந்து தங்களுடைய பிரச்சினையைத் தாங்களே வெளிக்கொணரும் பொருட்டு மாபெரும் ஊர்வலத்தையும் அதன் பின்னர் பொதுக்கூட்டத்தையும் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இம் மேதின நிகழ்வில் தொழிலாளர்கள், விவசாயிகள், தனியார் துறை ஊழியர்கள், மாதர் அமைப்புக்கள், மனித நேயமிக்கவர்கள், தொழிலாளர் ஆதரவு சக்திகள், அனைத்து உழைக்கும் வர்க்கத்தை சோந்தவர்கள் கலந்து கொண்டு உழைக்கும் வர்க்கத்தின் சக்தியை மேம்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (160)

# ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

புதிதாக வடமாகாணத்துக்கு ஆசிரிய நியமனக் கடிதம் வழங்கப்பட்ட வடமாகாணத்தைச் சேர்ந்த கணித, விஞ்ஞான பட்டதாரிகள் மற்றும் கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரர்களை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் சந்திக்கவுள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை நியமனக்கடிதத்துடன் தவறாது சமூகமளிக்கும்படி வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். மேலும் இக்கல்விப் பணிப்பாளர்களையும், தவறாது சமூகமளிக்கும்படி அவர் மேலும் அறிவித்துள்ளார்.

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இயந்திரங்களின் பிடியில் நாம்?

வரவர எதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய தேவை குறைந்து வருவதைப் பார்க்கிறோம். எதையும் மனனம் செய்து வைத்திருந்து கற்ற முறை இப்போது இல்லை. குர்ஆன் ஆகட்டும் விவிலியம் ஆகட்டும் புத்தரின் போதனைகள் ஆகட்டும் வேதங்கள் ஆகட்டும் எல்லாமே மனனம் செய்து சந்ததி சந்ததியாகக் கடத்தி வந்து நமக்குக் கிடைத்தவைதான்.

இதுபற்றிய ஒரு குறிப்பை இணையத்தில் வாசிக்க நேர்ந்தது. "மனனம் செய்வதில் பயனில்லை; அது ஒரு பிற்போக்குத்தனமான கற்பித்தல் முறை என்பதாக தற்போதைய பகுத்தறிவாளர்களிடம் ஒரு கருத்து நிலவுகிறது. 'விஷயத்தைப் புரிந்து கொண்டால் போதும் மனனம் தேவையில்லை' என்பது இவர்களின் வாதம். இது மிகவும் முட்டாள்தனமானது. ஏனென்றால், மனனம் என்பது சப்தத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தப் பிரபஞ்சத்தின் ஆதி அம்சங்களாக இருப்பவை ஒளியும் சப்தமும்தான். வேதங்கள் நான்கும் வாய்வழியாகச் சொல்லப்பட்டவையே. வேத மந்த்ரங்கள் உச்சரிக்கப்படும் போது ஏற்படும் சப்தம் — கனம் — நமது நரம்புகளில் அதிர்வலைகளை ஏற்படுத்துகிறது. இந்த வேதங்களை ஓதுபவர்கள் கனபாடிகள் என்று அழைக்கப்பட்டனர். கனபாடம் என்றால் மனனம் செய்யும் வழிமுறைகளில் ஒன்று. வேதங்கள் நான்கும் பல்லாயிரம் ஆண்டுகளாக அட்சரம் பிசகாமல் ஆதியில் இருந்தபடியே அதே சப்த நயத்தோடு ஒரு ஸ்வரம் கூட மாறாமல் இன்றும் பாடப் படுவதற்குக் காரணமே இந்த மனன முறைதான்..." இவ்வாறு சொல்கிறது அந்தக் கட்டுரை.

மனனக் கற்றலை இழந்ததோடு நம் ஞாபகத்திறனையும் இழந்துவருகிறோம் என்றே தோன்றுகிறது. கல்குலேற்றர் வந்ததோடு வாய்பாடு பாடமாக்குதல் அவசியமற்றுப் போனது. கம்ப்யூட்டர் வந்து நமக்காக எல்லா நினைவுகளையும் சேமித்து வைத்துக் கொண்டது. இணையத்தின் விரிந்த வெளி உண்டான பிறகு, அது எதைக் கேட்டாலும் நொடிக்குள் கொண்டுவந்து கொட்டியது.

கம்ப்யூட்டர் நினைவிடங்களின் அளவு பெருகிப் பெருகி வளர்ந்தபடியே, நம் ஞாபகத்தில் எதையும் இருத்தி வைத்துக் கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. பல்கிப் பெருகிவிட்ட இணையதளங்கள், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் நம்மைப் படுசோம்பேறிகளாக்கி விட்டதுடன் மெல்ல மெல்ல எங்களைத் தமக்கு அடிமைகளாக மாற்றிவிட்டன.

எல்லாவற்றையும் இயந்திரங்களின் கையில் கொடுத்துவிட்டு நாம் மறதி மன்னர்களாகி விட்டோம். இந்த மறதி நம்மைக் குழப்பி கிட்டத்தட்ட நோயாளிகளாகவே மாற்றிவிட்டது. வீட்டிலிருந்து கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்தபிறகு நம்மை நாமே நம்பமுடியாத நிலை ஏற்படுகிறது. மின்விசிறியை நிறுத்தினோமோ, வீட்டுக்கு பூட்டு போட்டோமா இப்படி பல்வேறு சந்தேகங்கள். இயந்திரகதியாக வாழ்க்கையை ஓட்டுகிறோம்.

"கேட்பது பார்ப்பது மட்டுமே நடைமுறையில் உள்ள மனிதர்களாகி விட்டோம். சமீப காலம் வரையில் கூட, பல பேச்சாளர்கள், அடிபிறழாமல் கவிதைகள், செய்யுள்கள், பாடல்களை நினைவிலிருந்து பாடி அருமையாக விளக்கங்கள் கொடுப்பதைக் கேட்டிருக்கிறோம். இப்போதோ கையில் ஐ-போட் ஐ-பாட் கருவிகளை வைத்துக் கொண்டு அதைப் பார்த்துப் பாடுபவர்கள் பேசுபவர்களையே பார்க்கிறோம்.

இவ்வாறு ஞாபக சக்தியைக் கைவிட்டு வரும் மனிதனது மூளையின் விருத்தி குறைந்துவிடுமா தெரியவில்லை. ஆனால், விஞ்ஞானக் கதைகளில் சொல்லப்படுவது போல, இயந்திரங்களின் சிந்தனைக்கு இவன் அடிபணியும் காலம் வரலாம் என்றே தோன்றுகிறது.

- ஆசிரியர்

# அடையாள அட்டை பெறுவோர் 2 இலட்சம்

# 4000 பேரே இதுவரை விண்ணப்பம்

## ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தகவல்

(வவுனியா)

பாடசாலை மாணவர்களுக்கு அடையாள அட்டையை வழங்குவது தொடர்பில் புதிய வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் கல்வி அதிகாரிகளுக்கு வழங்கியபோதிலும் இதுவரை 4 ஆயிரம் விண்ணப்பங்களே கிடைத்துள்ளன. உண்மையில் இதுவரை நாம் 2 இலட்சம் விண்ணப்பங்களை பெற்றிருக்க வேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இவ் வருட ஜனவரியில் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கான அடையாளஅட்டை வழங்குவது தொடர்பில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினோம். எனினும், இதுவரை எமக்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களின் தொகை 4000 ஆகும்.

இந்த நாட்டில் இயங்கும் திணைக்களங்கள் பலவும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நிறுவனங்கள் தமது திணைக்களத்தில் பதிவுகளை மேற்கொள்வதற்கு அடையாள அட்டை இலக்கத்தையே பயன்படுத்துகின்றன. அதன் காரணத்தால் அடையாள அட்டை அத்தியாவசியமான ஒன்றாக மாறியிருக்கின்றது. ஆனால், எமது திணைக்களம் இன்னும் காலம் கடந்த தொழில்நுட்பத்தையே பயன்படுத்தி வருகின்றது. இந்த திணைக்களத்தின் தற்போதைய வசதிகளைக் கருத்தில்கொண்டால் ஒரு நாளைக்கு 4000 அடையாள அட்டைகளை விநியோகிக்கும் ஆற்றலே உள்ளது. எனினும் இத்திணைக்களம் வருடாந்தம் 10 இலட்சம் வரையான அடையாள அட்டைகளை விநியோகிக்கின்றது. அதில் சாதாரணதரப்பரீட்சை எழுதும் மாணவர்களின் அடையாள அட்டை 3.5 இலட்சத்தில் இருந்து 4 இலட்சம் வரையாக இருக்கின்றது. இந்த நிலையில் வருட இறுதில் விண்ணப்பங்கள் வந்து குவிந்து அடையாள அட்டையை வழங்குவதில் ஏற்படும் சிரமத்தை குறைத்துக்கொள்வதற்காகவே இத்திணைக்களம் புதிய பொறிமுறையை அறிமுகம் செய்திருந்தது. எனினும், இது தொடர்பில் மக்கள் எடுக்கும் கவனம் போதாததாக இருக்கின்றது.

அடையாள அட்டையை விநியோகிக்கும் பணி தொடர்பில் நாம் சிந்திக்கும் போது இரு வகையாக பார்க்கலாம். அதாவது திணைக்களம் தனது பணியை செய்ய வேண்டியுள்ளது மற்றையது மக்கள் தாங்கள் விண்ணப்பித்து அடையாள அட்டையை பெறவேண்டியுள்ளது.

சட்ட ஏற்பாடுகளின் ஆரம்பத்தில் 18 வயதைப் பூர்த்தி அடைந்தவர்கள் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 1981 ஆம் ஆண்டின் சட்ட திருத்தத்தின் பிரகாரம் 16 வயதை பூர்த்தி செய்கின்ற ஒருவர் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், துரதிஷ்ட வசமாக அடையாள அட்டையைப் பெறும் வயதை தாண்டிய பின்னரும் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காத தன்மையைப் பார்க்கின்றோம். குறிப்பாக 40, 50 வயதைத் தாண்டிய பின்னரும் கூட அடையாள அட்டை பெறாத சந்தர்ப்பங்களை நாம் காண்கின்றோம்.

16 வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அடையாள அட்டையை வழங்க வேண்டும் என இந்தத் திணைக்களத்திற்கு கடமைப்பாடு உள்ளது. எனவே 16 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த இரு நடைமுறையும் பூர்த்தி அடையும் போது இந்த நாட்டின் பிரஜை தனது உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு தனது அடையாளத்தை நிரூபிக்க முடியும் என்றார் (160)

# நாட்டில் உள்ள 25 இனங்களும் ஒரு தாய்ப்பிள்ளைகளாக வாழ வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் மூன்று இனங்களல்ல, கிட்டத்தட்ட 25 இனங்கள் உள்ளன. இந்த இனங்கள் அனைத்தும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும் என தொலைத்தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தேசத்துக்கு மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட இ - கல்வி மையத்தினைத் திறந்து வைக்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு இந்த நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பெடுத்த போது அவர் 'முன்பாக இரண்டு பாரிய பிரச் சினைகள் இருந்தன. முதலாவது, நாட்டில் சமாதா னத்தினை ஏற்படுத்துவது. இரண்டாவது நாட்டை அபிவிருத்தி செய்வது. அந்தவகையில், ஜனாதிபதி முன்பாக இருந்த முதலாவது பிரச்சினைக்கு 2009 ஆம் ஆண்டு தீர்வு காணப்பட்டது. அதனால் தான், நாம் எல்லோரும் இந்த நாட்டில் சமாதான்த்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இரண்டாவது பிரச்சினை, நாட்டிற்க்கு அபிவிருத்தியினைப் பெற்றுக்கொடுப்பதாகும். அதற்கான நடவடிக்கைகளில்தான் நாம் தற்போது இறங்கியிருக்கின்றோம்.

நாட்டில் அபிவிருத்தியினை ஏற்படுத்தும் பொருட்டு, அமைச்சுக்களுக்கு ஜனாதிபதி பல்வேறு பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்துள்ளார். அந்தவகையில் எனது அமைச்சுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை நான் பொறுப்புணர்வுடன் செய்து வருகின்றேன். இலங்கையில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என்கிற மூன்று இனங்கள் மட்டும் வாழவில்லை. கிட்டத்தட்ட 25 இனங்கள் இந்த நாட்டில் வாழ்கின்றன. இந்த இனங்கள் அனைத்தும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே தன்னுடைய விருப்பமாகும் என்றார்.

இதன்போது, அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் ஐ.எம். ஜெனீபா ஆகியோரின் சேவையினைப் பாராட்டி பாடசாலை நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தப்பட்டதோடு, நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

## சிரேஷ்ட பிரஜைகள் குழுக்கூட்டம்

(முழங்காவில்)

புன்னை நீராவி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட பிரஜைகள் குழுவின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் உழவனூர் முன் பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட பிரஜைகள் குழுத்தலைவர் சி.பெருமாள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்வாதாரக் கடன் திட்டம் பற்றி தீர்மானிக்கப்படவிருப்பதால் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (112)

## கண்டியில் சர்வதேச மட்ட போக்குவரத்துத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் முதல் முறையாக சர்வதேச மட்ட வீதிக் கடவை மற்றும் போக்குவரத்து திடடங்களை செயற்படுத்த கண்டி பொலிஸ் மற்றும் கண்டி மாநகர சபை தீர்மானித்துள்ளது. நேற்றுத் தொடக்கம் இப்புதிய போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்படும் என மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.என்.பி.அம்பன்வல தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக புதிய போக்குவரத்து திட்டத்திற்கான ஒத்திகை பார்க்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். புதிய போக்குவரத்து திட்டத்திற்கு அமைய கண்டி நகரை அண்மித்த பிரதான வீதிகளில் ஒருபக்க போக்குவரத்து செயற்படுத்தப்பட வுள்ளதாக அவர் கூறினார்.

■ செ.கார்த்திகா

# சர்வதேச ஆகாய, கடல் வர்த்தகத்துக்குள் நுழையத் தயாராகும் யாழ்ப்பாணம்!

**விரைவாக** நடைபெற்றுவரும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகள் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச கடல் வர்த்தகத்துக்குள் நுழையத் தயாராகி வருகின்றது.

காங்கேசன் துறைமுகமானது இலங்கையின் வட பகுதியுடன், ஏனைய உலக நாடுகளின் தொடர்புகளைப் பேணுகின்ற ஒரு நுழைவாயிலாக இருப்பதுடன், பிராந்திய மற்றும் உள்ளூர் தொடர்பைத் தொடர்ந்தும் தக்க வைத்திருப்பதற்குமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகவும் விளங்குகின்றது.

இதனால், மிக விரைவில் இத்துறைமுகத்தின் ஊடாக கொழும்பு மட்டுமன்றி இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் உட்பட ஏனைய இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கிடையில் வடமாகாணம் மிகக் குறுகிய நேரத்தில் வியாபார ஏற்றுமதி, இறக்குமதிகளில் ஈடுபடும் எனவும், வடக்கின் பொருளாதாரத்தில் பாரிய வளர்ச்சி ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது பெரிய கப்பல்களை நிறுத்தி வைப்பதற்காக இந்த துறைமுகத்தை ஆழமாக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இந்தப் பணிகளுக்கென இந்தியாவில் இருந்து வந்துள்ள கப்பல் ஒன்றும் ஈடுபட்டுள்ளது.

**துறைமுகத்தின் வரலாறு!**

நாட்டில் நிலவிய யுத்த சூழலின் போது புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கப்பல்கள் மீதான தாக்குதல்களால் காங்கேசன்துறை துறைமுகம் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன், உயர்பாதுகாப்பு வலயமாகவும் மாறியது.

இருப்பினும், ஏ9 பிரதான வீதி மூடப்பட்ட காலத்தில் மிகக்குறைந்த வசதிகளைக் கொண்டிருந்த காங்கேசன் துறைமுகம் ஊடாகவே யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தபால் சேவை உட்பட அனைத்துத் தேவைகளும் பூர்த்திசெய்யப்பட்டன.

"லங்கா முடித" என்ற சரக்கு கப்பல் மூலமே இந்த ஏற்றுமதி, இறக்குமதிகள் நடைபெற்றதுடன், அந்தக் காலகட்டத்தில் கடல் மார்க்கமாகவே போக்குவரத்தை மேற்கொள்ளவேண்டியிருந்ததால் இந்தச் சரக்கு கப்பலே பயணிகள் கப்பலாகவும் காணப்பட்டது.


கொழும்பிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு பொருட்களை ஏற்றிவரும் சரக்கு கப்பல், திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கும் பயணிகளை ஏற்றி இறக்கியது.


சரியான இருக்கை இல்லாமல், வாந்தியுடன் கப்பலில் அங்கும் இங்கும் உட்கார்ந்தபடி, போய்ச் சேருவோமா இல்லையா என்ற அச்சத்துடன் களைத்து விழுந்து யாழ்ப்பாணம் அல்லது திருகோணமலை வந்துசேர்வார்கள். கப்பல் வருகைக்காக இரு கரைகளிலும் வரிசையில் பல நாள்கள் காத்திருக்கும் மக்கள், வந்தவுடன் முண்டியடித்து ஏறுவதும் இடம் கிடைக்காமல் ஏமாற்றத்தோடு திரும்புவதும் என அந்தக் காலகட்டத்தில் மக்களின் பயணங்கள் இருந்தன.

**இலங்கையின் கனவை நனவாக்க கைகொடுத்த இந்தியா!**

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர், வடபகுதியின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் வகையில் காங்கேசன்துறை துறைமுகத்தை தேசியமட்டத்தில் மட்டுமன்றி சர்வதேசமட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றும் நோக்குடன் அதிநவீன வசதிகளுடன் புனரமைக்கவேண்டும் என இலங்கை அரசாங்கம் பெரிதும் ஆர்வம் காட்டி வந்தது. இந்தப் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பு வழங்க இந்தியாவும் முன்வந்தது.

இதனையடுத்து, காங்கேசன் துறைமுக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை - இந்தியாவுக்கிடையில் 2011ஆம் ஆண்டு யூலை மாதம் கைச்சாத்திடப்பட்டது.



"தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை மட்டும் காலத்திற்குக் காலம் அபகரித்து வந்த சுயலாப அரசியல் தலைமைகள் அரசியல் தீர்வு தவிர வேறெதுவும் தமிழ் மக்களுக்குத் தேவையில்லை என்றே அவைகளை நிராகரித்து வந்திருக்கின்றனர். அரசியல் தீர்வு தேவை என்று அவர்கள் கூச்சலிடுவது கூட வெறும் தேர்தல் வெற்றிகளுக்கான கோரிக்கைகளாகவே காண முடிகின்றது. உண்மை நோக்கமோ முயற்சியோ அதில் இல்லை. உரிமை என்பது அரசியலில் மட்டுமல்ல. சமூக பொருளாதார அபிவிருத்தியிலும் இருக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு சோறும் தேவைப்பட்டது. சுதந்திரமும் தேவைப்பட்டது. அபிவிருத்தியும் தேவைப்பட்டது. அன்றாட பிரச்சினைக்கான தீர்வும் தேவைப்பட்டது.தொழில் ரீதியாகவும், உற்பத்தி ரீதியாகவும்,தமிழ் பேசும் மக்கள் மீட்சி பெற்று வருவதற்கு விரும்புகின்றார்கள்.அவர்களது வாழ்வியல் உரிமைகள் சிறந்து விளங்குவதற்காக உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக உற்பத்தி முறைகளிலும், தொழில் முறைகளிலும் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட திட்டங்கள் எவைகளென ஆராய்ந்து அவைகளை செயற்படுத்த வேண்டியுள்ளது."

– அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

இந்தத் திட்டத்துக்கு 2.2 பில்லியன் ரூபாவை இந்திய அரசு செலவிடவுள்ளது.

இலங்கை துறைமுக மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் சுஜாத்தா கூரே மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஆணையாளர் அசோக் கே.காந்தா ஆகியோருக்கிடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சில தினங்களிலேயே இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் புனரமைப்புப் பணிகளின் முதற்கட்டமாக, காங்கேசன்துறைமுகத்தில் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட 6 கப்பல்களின் சிதைவுகள் மீட்கும் பணிகள் நடைபெற்றன.

19 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் துறைமுகப் பகுதியிலிருந்து சேதமடைந்த கடற்கலங்களின் பாகங்கள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாக கடற்கலங்களின் பாகங்களை அகற்றுவதற்கு பொறுப்பாகச் செயற்பட்ட அதன் தலைவர் ஜோசப் பரன் தெரிவித்துள்ளார்.

கப்பற்சிதைவுகள் முழுமையாக அகற்றப்பட்டதை அடுத்து, 2013 ஏப்ரல் 19ஆம் திகதி பெரிய கப்பல்களை உள்வாங்கும் நோக்கில் துறைமுகத்தினை ஆழமாக்கும்(8 அடி) பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பணியை இந்திய தூதரக அதிகாரிகள், கடற்படையினர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆழ்கடல் மீன் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுவது இதுவே முதற்தடவையாகும். இந்நிலையில், இத்துறைமுகத்திற்கான படகுத்துறை நிர்மாணிப்பதற்கான பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக துறைமுக மற்றும் நெடுஞ்சாலை பிரதி அமைச்சர் றோகித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

**துறைமுக அபிவிருத்தியால் என்ன பயன்?**

காங்கேசன் துறைமுகமானது இலங்கையின் வடக்குப் பகுதியுடன், ஏனைய உலக நாடுகளின் தொடர்புகளைப் பேணுகின்ற ஒரு நுழைவாயிலாக இருப்பதுடன், பிராந்திய மற்றும் உள்ளூர் தொடர்பைத் தொடர்ந்தும் தக்க வைத்திருப்பதற்குமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது.

எனவே, நவீன வசதிகொண்ட, பெரிய கப்பல்களை நங்கூரமிடக்கூடிய ஒரு துறைமுகமாக காங்கேசன்துறை துறைமுகம் புனரமைக்கப்படுவதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி முழு வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்குமே அது பெரிதும் துணைபுரியும்.

இத்துறைமுகத்தைப் பயன்படுத்தி இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் உட்படஏனைய இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளுக்கிடையில் இலங்கை மிகக் குறுகிய நேரத்தில் வியாபார ஏற்றுமதி, இறக்குமதிகளில் ஈடுபட முடியும்.

மேலும், நாட்டின் ஏனைய பகுதிகளுடன் யாழ். குடாநாட்டை இணைப்பதிலும் காங்கேசன்துறைமுகம் மிகப் பிரதான பங்களிப்பை வழங்கும்.

**அனைத்துத்துறைகளிலும் வளர்ச்சி கண்டுவரும் வடமாகாணம்!**

30 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டுப்போரானது 2009 முடிவுக்கு வந்ததையடுத்து வடபகுதிக்கான ஏ-9 வீதி அகலிக்கப்பட்டு "காப்பெற்" வீதியாக மாற்றப்பட்டுள்ளதுடன், ஓமந்தையிலிருந்து காங்கேசன்துறைமுகம் வரையிலான புகையிரத பாதையும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது ஓமந்தையிலிருந்து மாங்குளம் வரையில் தண்டவாளம் ஒட்டும் பணிகள் நிறைவடைந்து, தண்டவாளம் பொருத்தும் பணிகள் நடைபெறுகின்றன.


1990இற்குப் பின், 23 வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு நேரான புகையிரதப்பாதையில் அதிவேகமாக புகையிரதம் கூவியபடி வரப்போகிறது.

இவ்வாறு வடமாகாணம் அனைத்து துறைகளிலும் துரிதகதியில் அபிவிருத்தி கண்டுவரும் நிலையில் காங்கேசன்துறை துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படுவது வடக்கின் வளர்ச்சிக்கு மற்றுமோர் வரப்பிரசாதம்.

(08ஆம் பக்கம் பார்க்க)



# 1000 சீசீ மோட்டார் சைக்கிளை பதிவுசெய்ய அனுமதி



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் 1000 சீசீ இயந்திர வலுக்கொண்ட மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்று மோட்டார் வாகன பதிவுத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கான வர்த்தமானி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் திணைக்களப் பதிவாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் 600 சீசீ இயந்திர வலு கொண்ட மோட்டார் சைக்கிள்களை மட்டுமே மோட்டார் போக்கு வரத்து சட்டத்தின் கீழ் பதிவுசெய்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1000 சீசீ வலுக்கொண்ட மோட்டார் சைக்கிள்களை ஓட்டப் பந்தையத்திற்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்று ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# மின்கட்டன உயர்வை அனுமதித்த ஆணைக்குழு மீது வழக்கு

கடந்த வாரம் மின் கட்டண உயர்வை அனுமதித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் போவதாக தேசிய மின் நுகர்வோர் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான தீர்மானத்தை திடீரென அமுல் செய்யமுடியாது. இது நன்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும். சிறு கைத்தொழிலாளர்கள் இதைத் தாக்குப்பிடிக்க முடியுமா என ஆராயப்படவேண்டும் என்று அந்த இயகத்தின் பேச்சாளர் பந்துல சந்திரசேன கூறினார்.

சிறிய அளவு கைத்தொழில்களுக்கு மின்கட்டணத்தில் 19 சதவீதமும், நடுத்தரக் கைத்தொழில்களுக்கு 15 சதவீதமும் பெரிய அளவிலானகைத்தொழிலகளுக்கு 9 சதவீதமும் கட்டண அதிகரிப்பு செய்யப்படும்.

இது போன்று இலங்கை மின்சாரசபை 2008 ஆம் ஆண்டு மின்கட்டண அதிகரிப்பொன்றை கொண்டுவருவதற்கு முயன்ற போது உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. அப்போது நீதிமன்றம் இந்த மின் கட்டண அதிகரிப்பு முறையை நிராகரித்து மாற்றுத்திட்டம் ஒன்றை முன் வைக்குமாறு பணித்தது.

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் இலங்கையின் கடன் தொகை உயர்வு

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் இலங்கையின் மொத்தக் கடன் தொகை உயர்வடைந்துள்ளது. முக்கியமாக வெளிநாட்டு நாணயங்களுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபாவின் பெறுமதி பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக 2012 ஆம் ஆண்டில் மொத்தக் கடன் 20700 கோடி ரூபாவினால் உயர்வடைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்தக் கடன் 5,13300 கோடி ரூபாவாகக் காணப்பட்டதாகவும், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் இந்தத் தொகை 2012 ஆம் ஆண்டில் 600,000 கோடி ரூபாவாக உயர்வடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடன் தொகை 17 வீதமாக அதிகரித்துள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தியின் 79 வீதத்தினால் கடன் தொகை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ரயில்வே ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டது


இரயில்வே ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் முன்னெடுக்கவிருந்த தொழிற்சங்க நடவடிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தமது சம்பளப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி செயலாளருடன் கலந்துரையாடல் இடம்பெற உள்ளமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக இரயில் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஜானக்க பெர்னாந்து குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் இந்தத் தீர்மானம் தற்காலிகமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கலந்துரையாடலில் கிடைக்கும் பதிலுக்கு அமைய தமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாக இரயில் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க ஒன்றியங்களின் ஏற்பாட்டாளர் மேலும் கூறியுள்ளார்.

# சிறுபான்மை ஒடுக்குமுறைக்கு எதிராக இலங்கை குரல் கொடுக்கவேண்டும்




பர்மாவில் சிறுபான்மை முஸ்லிம்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

பர்மாவின் அராகன் மாநிலத்தில் ரொகின்கியா முஸ்லிம்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் அந்நாட்டு அரசாங்கத்துடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது,

குறித்த முஸ்லிம்கள் இன ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதனை இலங்கை அதிகாரிகள் நேரில் பார்வையிட்டதாகக் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் நாட்டை விட்டு தப்பிச் சென்ற குறித்த முஸ்லிம்களுக்கு இலங்கைக் கடற்படையினர் அடைக்கலம் வழங்கியிருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

2012 ஜுன் மாதம் முதல் பர்மா அதிகாரிகள் குறித்த முஸ்லிம்களுக்கு எதிராக இன ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டியது அவசியமானது என மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

# இத்தாலியில் இலங்கைப் பெண் எரியுண்டு உயிரிழப்பு

(கொழும்பு)

இத்தாலியில் இலங்கைப் பெண் ஒருவரின் மரணம் தொடர்பில் அவரது கணவர் கைது செய்யப்படவுள்ளார்.

இத்தாலியின் அதிகாரத்தின் கீழ் உள்ள சிசிலித் தீவின் கெட்டேனியாவில் வசித்துவரும் இலங்கைப் பெண்ணின் மரணம் தொடர்பில் அவரது கணவரான இலங்கையர் கைது செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார இறுதியில் 42 வயதான மதுரி வர்ணகுல என்ற இலங்கைப் பெண் தீயில் எரியுண்டு மரணமானார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவரது கணவன் மீது சிசிலிப் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சிசிலிப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயர்கல்வி அமைச்சிடம் பட்டம் வழங்கும் அதிகாரம்

பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து கல்வி நிறுவனங்களுக்கு பட்டம் வழங்கும் அதிகாரத்தை உயர்கல்வி அமைச்சு எடுத்துக்கொண்டுள்ளது என அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.


பட்டப்படிப்பு பாடநெறிகளை நடத்துவதற்கான தகுதியை ஆராய்ந்ததன் பின் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தனியார் நிறுவனங்களுக்கும் பட்டம் வழங்கும் தகுதியை வழங்கியது.

பட்டப்படிப்பு பாடநெறிகளை நடத்துகின்ற 9 தனியார் நிறுவனங்கள், அரை- அரசாங்க நிறுவனங்கள் உள்ளன. தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் இவற்றுள் ஒன்றாகும்.

இனிமேல், அரச பல்கலைக் கழக விடயங்களை மட்டுமே பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு கவனமெடுக்குமென உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்தார்.

ஏற்கனவே, அரசாங்கம் தனியார் பல்கலைகழகங்களை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கென நேரடி வெளிநாட்டு முதலீட்டை அரசாங்கம் விரும்புகின்றது குறிப்பிடத்தக்கது.

# மஹரகம பகுதிகளில் ஹெரோயினுடன் இருவர் கைது



(கொழும்பு)

மஹரகம மற்றும் வெள்ளம் பிட்டிய ஆகிய பகுதிகளில் ஹெரோயின் போதைப் பொருட்களுடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹரகம - செத்சிறிமாவத்தை பகுதியில் 2 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோ்யினுடன் 47 வயதுடைய சந்தேகநபர் மஹரகம பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

இவர் நேற்று கங்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டார். இதே வேளை, வெள்ளம்பிட்டி - சிங்கபுர பகுதியில் 7 கிராம் ஹெரோயினுடன் 28 வயதுடைய நபர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று புதுக்கடை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

# 62 இலட்சம் ரூபா கடிகாரம் இரும்புக்கடையிலிருந்து மீட்பு

முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெலின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த சுமார் 62 இலட்சம் ரூபா பெறுமதியான கடிகாரம் உள்ளிட்ட இன்னும் சில பெறுமதியான பொருட்களை பொலிஸார் இரும்புக் கடையிலிருந்து மீட்டுள்ளனர்.

அவருக்குச் சொந்தமான கீகியனகந்த தோட்டத்திலுள்ள பங்களாவில் இருந்தே இந்தப் பொருட்கள் திருடப்பட்டு, பழைய இரும்புக் கடைக்கு விற்கப்பட்டுள்ளன.

300 வருடங்கள் பழமையான மேசைக் கடிகாரம், ஆறரை அடி உயரமான விளக்கு உள்ளிட்ட பெறுமதியான பொருட்களே இவ்வாறு விற்கப்பட்டுள்ளன.

பங்களாவில் கதவை உடைத்துக்கொண்டு உட்புகுந்து திருடப்பட்ட கடிகாரத்தை குறித்த நபர் பழைய இரும்புக் கடைக்கு 8000 ரூபாவிற்கு விற்றுள்ளார். விளக்கு மற்றுமொரு இரும்புக் கடைக்கு விற்கப்பட்டுள்ளது.

பொருட்கள் கைப்பற்றப்பட்டதையடுத்து பழைய இரும்புக் கடை முதலாளி உட்பட நான்கு பேரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். முன்னாள் நிதியமைச்சரான ரொனி டி மெல் பல வரவு-செலவுத்திட்டங்களை இந்த பங்களாவில் வைத்தே தயாரித்துள்ளார்' என்று தெரிவிக்கப்படுகின்றது.


கீகியனகந்த பங்களாவின் முதற் சொந்தகாரர் ஆங்கில



இனத்தைச் சேர்ந்தவர் என்றும் இந்தக் கடிகாரத்தை அவர்களே முன்னாள் அமைச்சர் ரொனி டி மெல்லுக்கு பரிசளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# புங்குடுதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்)

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2013



## ஆலய வரலாறு

மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் (பூவரசு) ஆகியவை ஒருங்கே அமையப்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக விளங்குவது கண்ணகையம்மாள் என வழங்கும் அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் ஆகும். இவ்வாலயம் புங்குடுதீவு தெற்குக் கடற்கரை மணற்பரப்பில் ஏறக்குறைய ஆயிரம் பரப்பு நிலத்தில் அமைந்துள்ளது. வேண்டுவார் வேண்டுவதை வழங்கி அருள்புரியும் அன்னையாம் கண்ணகையம்மன் கோவில் கொண்டுள்ள இவ்வாலயத்தின் சிறப்பு சொல்லில் அடங்காததாகும்.

கி.பி.1505 இலிருந்து போர்த்துக்கேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இலங்கையின் புங்குடுதீவு நிர்வாகத்தினரில் குறிப்பிடத்தக்கவர் கதிரவேலு ஆறுமுகம் உடையார் ஆவார். இவருக்கு புங்குடுதீவு கிழக்கில் இருந்து தெற்குக் கடற்கரை வரை காணிகள் இருந்தன. இவர் தனது பட்டியிலிருந்து மந்தைகளைக் காலையில் வெளியில் சென்று மேய்ந்து வருவதற்காகத் திறந்து விடுவார். இவரது மாடுகளும், எருமைகளும் வழமைப்பிரகாரம் வெளியில் சென்று வயிராற மேய்ந்துவிட்டு மாலையில் தங்களது பட்டிக்குத் திரும்பி விடும். ஒருநாள் மாலையாகியும் அவரது மாடுகள் பட்டிக்குத் திரும்பவில்லை. உடனே உடையார் தனக்கு வேண்டிய சிலருடன் மாடுகள் வழக்கமாக மேயப் போகும் இடங்களுக்குத் தேடிப்போனார். என்னே அதிசயம்! இந்து சமுத்திரத்தின் தென்கிழக்குக் கடற்கரையில் கோரியா என்னும் இடத்தின் ஒருபகுதியில் ஏதோ ஒன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு அவரது மாடுகள் நின்றன. அங்கு சென்று மாடுகளைத் துரத்தினர். ஆனால் மாடுகள் அந்த இடத்தை விட்டு அசையவில்லை. அருகில் சென்று பாரத்தபோது அங்கே மாடுகளின் நடுவே ஓர் அழகிய பேழை காணப்பட்டது. சென்றவர்கள் பேழையைத் தூக்கிக் கரைக்குக் கொண்டு வர மாடுகளும் கரைக்குத் திரும்பி வந்தன. கரைக்கு வந்ததும் பெட்டியை ஓரிடத்தில் வைத்த போது அப்பெட்டி நிலத்தில் இருப்புக் கொள்ளவில்லை. இதனால் திரும்பவும் அவ்விடத்தில் இருந்து தூக்கிக் கொண்டு வந்து நாயன்மார் காடு என்ற இடத்தில் வைத்துத் திறந்து பார்க்க முற்பட்டனர். ஆனால் அந்த இடத்திலும் அப்பெட்டி இருப்புக் கொள்ளாததோடு அவர் களால் பெட்டியைத் திறக்கவும் முடியவில்லை. அவர்கள் மீண்டும் அப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு தற்போது இக்கோயில் அமைந்துள்ள இடத்திற்கு வந்தனர்.

அங்குள்ள ஒரு பழைமையான பூவரசம் மரத்தின் நிழலில் வைத்துவிட்டு இளைப்பாறிய பின் திரும்பவும் தூக்கினர். ஆனால் அவர்களால் மீண்டும் அப்பெட்டியை அவ்விடத்தில் இருந்து தூக்க முடியவில்லை. இச்செய்தி ஊருக்குள் பரவியதும் பலர் அங்கு வந்து சேர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து தூக்க முயன்றும் முடியாததால் பெட்டியைத் திறந்து பார்த்தனர். அதனுள் அழகான ஒளிமயமான அம்பாள் சிலை ஒன்று காணப்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற ஒரு வயோதிகப் பெண் உருக்கொண்டு அம்பாளே பேசுவது போல் பேசமுற்பட்டாள். நான் திருவருள் கூட்டிய கண்ணகிப் பெண். என்னுடன் எனது பாதுகாப்பிற்காக இதோ பத்திரகாளிக்கும் இந்த இடம் பிடித்துக் கொண்ட படியால் இங்கு வந்து சேர்ந்தோம். எங்களை இந்த இடத்திலேயே பிரதிஷ்டை செய்து ஆறுதல் படுத்துங்கள். நன்மை உங்களை நாடி வரும். மற்ற ஆறு சிலைகள் வெவ்வேறு இடங்களுக்குப் போயிருக்கின்றன. அங்குள்ளோர் அவற்றைப் பார்க்கட்டும் என்று கூறினாள். கண்ணகியாக உருக்கொண்டு அவ் வயோதிபப்பெண் கூறியதைக் கேட்ட அனைவரும் பக்திப் பரவசமடைந்தனர். சில நாட்களுக்கு பின்னர் உருக் கொண்ட அம்மையின் திரு வாக்கின்படி ஏனைய சிலை களும் கரம்பன், காரைநகர், வட்டுக் கோட்டை, மாதகல், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் கண் டெடுக்கப்பட்டு அவ்வவ் விடங்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஆறுமுக உடையார் கிராம மக்களுடன் சேர்ந்து கோயில் அமைக்கும் பணியில் இறங்கினார். கட்டடத்திற்குரிய மரங்கள் பெருமளவில் கிடைக்கவில்லை. இந்நிலையில் மறுநாள் இரவு மழையுடன் கூடிய பெரும் புயல் அடித்ததில் அதிகமான பனை மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால் ஆலயம் கட்டுவதற்கான நல்ல மரங்கள் கிடைக்கப்பெற்றன. இம்மரங்களைக் கொண்டு அப்பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு, கண்ணகி அம்மனை அங்கு பிரதிஷ்டை செய்து நித்திய பூஜைகள் செய்து வழிபட்டனர்.

## ஆசிச்செய்தி

சரித்திரப் பிரசித்தி பெற்ற புங்குடுதீவு கண்ணகைபுரத்திலிருந்து அருளாட்சி புரிகின்ற கண்ணகா பரமேஸ்வரி ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் இன்று சித் திரத் தேரேறி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி தந்து மும்மலங்களை அழித்து ஒறறுமை உணர்வை வளர்த்து பக்தியைப் பெருக்கி, தேர் வடம் பிடித்து கர்ம வினை களைப் போக்கி மானிடப் பிறவியின் பெரும் பயனை அடைந்து பேரானந்தப் பெருவாழ்வு தன்னை நாடி வருபவர்க்கு ஒரு குறையும் இன்றி தனது கடைக்கண் பார்வையால் எமது துயரங்களை நீக்கும் சமுத்திர நாயகியின் வடம் பிடித்து அருள் பெறுவோமாக.

உலகமெல்லாம் சக்தியம் மயமாகி ஒவ்வொருவர் மனக்குறையும்நீங்க வேண்டும் என அம்பாளைப் பிரார்த்தித்து நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹோற்சவ பிரதமகுரு
சிவஸ்ரீ யோகீஸ்வர சுபாஸ்க
சிவாச்சாரியார் (அத்தியடி)

(C/2691)
Ricco
Ice Chock
றிக்கோ
ஐஸ் சொக்
வேலணை.
0774603696
Ricco

தருண் ஸ்ருடியோ
Tharun Studio
T.P: 0773319068
0770632741
1ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு
(C/2690)

S. K. R.
கொம்யூனிகேசன் & புக் சென்ரர்
குறிகட்டுவான் வீதி, வங்களாவடி, வேலணை.
Te: 0217390360, 0775075431. Fax: 0217390360
e-mail: skrcom2011@gmail.com
(C/2680)

நவநாகரிக அழகுசாதனப் பொருட்களை
உங்கள் எண்ணம் போல தெரிவு செய்ய
நாடவேண்டிய இடம்
அஸ்வின் பான்சி அன் புத்தகசாலை
வங்களாவடிச் சந்தி
வேலணை.
(C/2682)

KAJAMUGAN
MULTI CENTER
T.P: 0217903208
0774010622
Main Street,
Vankalavady,
Velanai.
(C/2683)

அத்தியாவசியப் பொருட்கள்,
அழகுசாதனப் பொருட்கள் மற்றும்
பல்வேறு வகையான பொருட்களை
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
T.P: 0772403254
1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(C/2686)


கிரிஷாந் காட்வெயார்
சகலவிதமான
காட்வெயார்ஸ்
பொருட்களினையும் ஒரே
கூரையின் கீழ்
பெற்றுக்கொள்ளலாம்.
T.P: 0776508963
பிரதான வீதி,
வங்களாவடிச்சந்தி,
வேலணை.
(C/2679)

விஜயன்
வெதுப்பகம்
வங்களாவடி
வேலணை.
(C/2684)

கீர்த்திகா உணவகம்
காலை, மாலை, சிற்றுண்டி
வகைகளினை சுவையாக உண்டு மகிழ்ந்திட
நாடுங்கள்.
T.P: 0772151963
1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(C/2689)

ராஜா ராணி
Raja Rani
TEX & FANCY
வங்களாவடிச் சந்தி,
வேலணை.
(C/2681)

# இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தக் கூடாது என்கிறார் கருணாநிதி



இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்தக்கூடாது என்ற முடிவை, பொதுநலவாய நடவடிக்கைக் குழுவில் இடம் பெற்றுள்ள நாடுகள் ஆதரிக்க வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தென்னாபிரிக்காவில் அண்மையில் நடைபெற்ற சட்ட மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் 27 தலைமை நீதிபதிகள் கலந்து கொண்டதையும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைப் பிரச்சினை பற்றி பரிசீலனை செய்து பொதுநலவாய அமைப்பில் இருந்து அந்த நாட்டை நீக்குவது குறித்து முடிவெடுக்க வேண்டும் என அதில் வலியுறுத்தப்பட்டிருப்பதையும் கருணாநிதி மேற்கோள் காட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பொதுநலவாய நாடுகளின் தலைமை நீதிபதிகள் கேட்டுக் கொண்டிருப்பதாக கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, பொது நலவாய மாநாட்டை இலங்கை யில் நடத்தக்கூடாது என்ற முடிவை செயல்படுத்த அந்த அமைப்பில் உள்ள நாடுகளுக்கு இந்தியா அழுத்தம் தரவேண்டும் என்றும் கருணாநிதி தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# பாதுகாப்புச் செலவை அம்பானியே ஏற்பார்



குஜராத் முதல் மந்திரி நரேந்திர மோடிக்கு ஆதரவாகச் செயறபடும் ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு எதிராக தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய முஜாஹிதின் எச்சரிக்கை விடுத்து இருந்தது. இதனை அடுத்து மத்திய அரசு, முகேஷ் அம்பானிக்கு நாட்டின் பெருந்தலைவர்களுக்கு வழங்கப்படும் இசட் பிரிவு பாதுகாப்பை வழங்கியது. இதற்கு இடதுசாரிகள், நாட்டில் பாமர பெண்கள் பாதுகாப்பின்றி பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகிறபோது, ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிக்கு நாட்டின் உயரிய பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது முன் எப்போதும் இல்லாத ஒன்று என விமர்சித்தனர்.

இதற்கு மத்திய அரசு, நாட்டின் ஒரு முக்கிய தொழிலதிபருக்கு வந்த மிரட்டலை அடுத்து அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. இருந்தும், அந்த கமாண்டோ பிரிவு பாதுகாவலர்களுக்கான செலவுகளை அம்பானியே ஏற்பார் என்று மத்திய அரசு விளக்கமளித்துள்ளது.



**சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா, உத்தரப் பிரதேச முதல்வர் அகிலேஷ் யாதவ்வை சந்தித்துப் பேசினார்.**

## சர்வதேச...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இந்த துறைமுக அபிவிருத்தியின் மூலம் கப்பல் போக்குவரத்து கடல்மார்க்க வர்த்தக நடவடிக்கைகள் மட்டுமன்றி மீனவர்களும் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை, யாழ்.பலாலி விமான நிலையமும் நவீன வசதிகளுடன் சர்வதேச விமான நிலையமாக புனரமைக்கப்படுமேயானால், சர்வதேச நாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றுமொரு நுழைவாயிலாக அமையும். அண்மையில் மத்தல விமானநிலையத்தை திறந்துவைத்த பின்னர், இதேபோன்று பலாலி விமான நிலையத்தையும் சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தவுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெ.விதுஸ்மன்

முகவரி : மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

அகவை 1 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................

முகவரி : ..............................

பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



# மேசைப்பந்து முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15, 19 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி மகாஜனக் கல்லூரி உள்ளகத் திடலில் நடைபெற்றது.

15 வயது ஆண்கள் பிரிவில் முதலிடத்தை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தினை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும், மூன்றாமிடத்தை மல்லாகம் மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில்ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் முதலிடத்தினையும் இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி முதலிடத்தையும் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி முதலிடத்தையும்,அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும், மல்லாகம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

(93)



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா சங்கமும், யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கமும் இணைந்து நடத்திய அணிக்கு ஐந்து பேர் கொண்ட ஹொக்கிப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ். ஸ்ரார் அணி கைப்பற்றிக் கொண்டது. கல்வியங்காடு ஜி.பி.எஸ். மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணியை வீழ்த்தி யாழ். ஸ்ரார் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

## விளையாட்டுச் செய்திகள்

# தென்மராட்சி வலய கரப்பந்து வெளியானது முடிவுகள்

(மட்டுவில்)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இச்சுற்றுப் போட்டி கடந்த வாரம் மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஆண், பெண் என இரு பிரிவுகளாக போட்டிகள் நடாத்தப்பட்டன.

15,17, 19 என மூன்று வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு ஆண்: முதலாமிடம் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், இரண்டாமிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் கச்சாய் அ.த.க.பாடசாலை.

15 வயதுப் பிரிவு பெண்: முதலாமிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

17 வயதுப் பிரிவு ஆண்: முதலாமிடம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இரண்டாமிடம் மீசாலை வீரசிங்கம் மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் மட்டவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை.

17 வயதுப் பிரிவு பெண்: முதலா மிடம் மட்டுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, இரண்டாமிடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு ஆண்: முதலாமிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மூன்றாமிடம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

'19 வயதுப் பிரிவு பெண்: முதலாமிடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மூன்றாமிடம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி. (118)

# தேசிய மட்ட கிரிக்கெட் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தவுள்ள 15, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான தேசிய ரீதியிலான கிரிக்கெட் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

15 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றுபவர்களின் வயதெல்லை 01-01-1998 இற்கு பின் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும் எனவும், 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுபவர்களின் வயதெல்லை 01-01-1996 இற்குப் பின் பிறந்தவர்களாக இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை உடன் அனுப்பி வைக்குமாறும், அணி வீரர்களின் பெயர்களை மே 10ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யுமாறும் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

விண்ணப்பப் படிவங்களில் ஒவ்வொரு அணியின் சார்பிலும் 20 வீரர்களின் பெயர்களையே கூடுதலாகப் பதிவு செய்ய முடியும் எனவும், குறிப்பிட்ட வயதுப் பிரிவு வீரர்களினைக் கூடிய வயதுப் பிரிவிலோ அல்லது குறைந்த வயதுப் பிரிவிலோ பதிவு செய்ய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலை சார்பில் விண்ணப்பிக்கும் வீரர் அப்பாடசாலையில் ஜனவரி மாதம் 1ஆம் திகதிக்கு முன் சேர்ந்திருத்தல் வேண்டும் எனவும், அதற்குப் பின் புதிய பாடசாலையில் இணைந்து கொண்டவர்கள் இப்போட்டித் தொடரில் பங்குபற்ற முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டித் தொடர்கள் மூலம் இலைமறை காயாக உள்ள வீரர்களை வெளிக்கொணரக் கூடிய வாய்ப்புக்கள் உருவாகும் எனவும், இது போன்று அடுத்து வரும் ஆண்டுகளில் கவர்ச்சிகரமான முறையில் நடத்தத் தீட்டமிட்டிருப்பதாகவும், வீரர்களை கிரிக்கெட் விளையாட்டின் மீது ஆர்வம் ஏற்படும் வகையில் அமையும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (42)

# தகுதிச் சுற்றுப் போட்டியில் மகாஜனா வீரர்கள் தெரிவு

(கொழும்பு)

ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை சார்பாக பங்குகொள்ளும் வீர, வீராங்கனைகளுக்கான முதல் தகுதிச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த நான்கு வீரர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குபற்றும் வீரர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் தற்போது கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இலங்கை சார்பாக மேற்படி போட்டியில் பங்குகொள்ளவுள்ள வீர,வீராங்கனைகள் மூன்று சுற்றுக்களாக இடம்பெறும் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றமை வழமை. அந்த வகையில், முதல் தகுதிச் சுற்றுப்போட்டிகளே கடந்த ஏழாம் திகதி சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் அகில இலங்கை பாடசாலைகளைச் சேர்ந்த 17 வயதிற்குட்பட்ட வீர,வீராங்கனைகள் பங்குகொள்கின்றனர்.

இதில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பங்குபற்றிய யாழ்.மகாஜனாக் கல்லூரி வீராங்கனை ஜே.அனித்தா 2.90 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடம் பெற்றார். ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும், மகாஜனாக் கல்லூரி வீரர்கள் தட்டிச் சென்றனர்.

முதலிடத்தை, எஸ்.லக்ஸ்மன் 3.30 மீற்றர் உயரம் பாய்ந்தும், இரண்டாமிடத்தை எம்.டிலக்ஸன் 3.20 மீற்றர் உயரம் பாய்ந்தும், மூன்றாமிடத்தை ரி.மயூரன் 3.00 மீற்றர் உயரம் பாய்ந்தும் பெற்றுக் கொண்டு முதல் தகுதிச் சுற்றுப் போட்டியில் அசத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய இரு தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வெற்றியீட்டி ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்குகொள்ளும் அணியில் இடம்பிடிப்போம் என்ற நம்பிக்கை தமக்கிருப்பதாக அனித்தா தெரிவித்தார். அத்துடன் இப்போட்டிகளில் வெற்றியீட்ட வேண்டும் என்பது தனது இலக்கு என்றும் அதன் மூலம் நாட்டுக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை தேடிக் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் மனதில் துளிர்விட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (93)

# அந்த நாள் குழந்தை நட்சத்திரங்கள்

– R.P. ராஜநாயஹம் –


குழந்தை நட்சத்திரங்களில் துறுதுறுப்பு, நல்ல எக்ஸ்ப்ரஸன், ரசிகர்களை ஈர்த்த நடிப்பு என்று கலக்கியவர் டெய்சி ராணி. "யார் பையன்"(1957) படத்தில் டெய்சி ராணி சிறு பையனாக டைட்டில் ரோல்! இந்தி குழந்தை நட்சத்திரம்.

களத்தூர் கண்ணம்மா (1960) படத்தில் அறிமுகமான குழந்தை நட்சத்திரம் கமல்ஹாசன், பார்த்தால் பசி தீரும்(1962) படத்தில் இரட்டை வேடம்! பாதகாணிக்கை (1962), வானம்பாடி (1963), ஆனந்த ஜோதி (1963) படங்களில் நடித்த பின் தமிழ்ப் படங்களில் நடிக்கவில்லை. ஏனோ வாய்ப்பு தான் இல்லையோ அல்லது வேறு காரணமோ. டி.கே.எஸ் நாடகக்குழுவில் பயிற்சி.

கமல் ஹாசனின் குழந்தை நட்சத்திர வாழ்வு முடிவுக்கு வந்த பின் கர்ணன்(1964) படத்தில் மாஸ்டர் ஸ்ரீதர் என்ற பையன் தலை காட்டினான். கந்தன் கருணை (1967)யில் பாலமுருகனாக நடித்த மாஸ்டர் ஸ்ரீதர் பின் சத்தியம் தவறாதே (1968), தெய்வீக உறவு (1968) என்ற படங்களில் நாடக வசனம் பேசி பக்கா நாடக நடிக சிறுவனாக வளர்ந்து நம்ம குழந்தைகள் (1970) படத்தில் நாடகபாணியிலிருந்து மீள முடியாத, வளர்ந்து விட்ட, வயதுக்கு வந்து விட்ட பையனாக இருந்தான்.

குட்டி பத்மினி பாசமலர் (1961) படத்தில் குழந்தை சாவித்திரியாகத் தலைகாட்டி, நெஞ்சில் ஓர் ஆலயம் (1962) படத்தில் பிரபலம். நவராத்திரி (1964) இற்கு பின் குழந்தையும் தெய்வமும் (1965).

குழந்தையும் தெய்வமும் தான் குட்டி பத்மினிக்கு இன்று வரை சிறந்த படம்! குட்டி பத்மினியும் எதிர்கால கதாநாயகி நான் தான் என்ற பெருமிதத்தில் தான் இருந்தார். சிவாஜி அங்கிளுடன் ஜோடியாக நடிப்பேன். எம்.ஜி.ஆர் அங்கிளுடன் ஜோடியாக நடிப்பேன் என்று தான் பேட்டிகளில் சொல்லிக்கொண்டே!





நம் நாடு(1969) படத்தில் பார்க்கும்போதே இந்த முகம், மூக்கு அவ்வளவு சரியில்லை என்பது தெரிந்து விட்டது. அந்தப் படத்தில் குட்டி பத்மினிக்கு தம்பியாக நடிகை ஸ்ரீதேவி. துணைவன் (1969) படத்தில் தேவர் அறிமுகப்படுத்திய குழந்தை நட்சத்திரம். ஆதி பராசக்தி (1971) தெய்வக்குழந்தைகள் (1973) என்று ஸ்ரீதேவி குழந்தை நட்சத்திரமாக நடித்த முக்கிய படங்கள்.

கற்பகம்(1963) படத்தில் பேபி ஷகிலா குழந்தை நட்சத்திரம். "அத்தை மடி மெத்தையடி! ஆடி விளையாடம்மா!". பேபி ஷகிலாவின் பிற படங்கள் - எங்க வீட்டுப் பிள்ளை, இருவல்லவர்கள், எங்க பாப்பா.

ரோஜா ரமணி சிறுவனாக பக்த பிரகலாதா (1967), இரு மலர்கள் (1967), என் தம்பி (1968), சாந்தி நிலையம் (1969) போன்ற படங்களில் நடித்த குழந்தை நட்சத்திரம். மணிரத்தினத்தின் அஞ்சலி(1990)யில் ரோஜாரமணியின் மகன் தருண் தான் ரேவதி - ரகுவரனுக்கு மகன்.

கமல் குழந்தை நட்சத்திரமாக இல்லாத தமிழ்த்திரையில் ஆக்கிரமித்த மற்றொரு நடிகர் மாஸ்டர் பிரபாகர். பாமா விஜயம்(1967), இருகோடுகள் (1969) என்று தொடர்ந்த மாஸ்டர் பிரபாகர் கதாநாயகனாக வா ராஜா வா(1969)வில் முக்கியத்துவம்!

அனாதை ஆனந்தனில் டைட்டில் ரோல் செய்த(1970) மாஸ்டர் சேகர் குடியிருந்த கோவில் (1968) படத்தில் இரட்டை சின்ன எம்.ஜி.ஆர். அகத்தியர் (1972) மணிப்பயல் (1973) சொல்லத்தான் நினைக்கிறேன்(1973) வரை பையனாக நடித்தவர் தான் மாஸ்டர் சேகர்.

குழந்தை நட்சத்திரங்கள் சினிமாவில் "Miniature Adults" என்ற மிகையில் தான் நின்றனர்.

குழந்தை நட்சத்திரங்கள் அனைவருமே எதிர்காலத்தில் திரையில் கதாநாயகன், கதாநாயகிகளாக வலம் வருவோம் என்று நம்பியவர்கள்தான்.

கமல்ஹாசன் பதின்வயதில் டான்ஸ் அஸிஸ்டண்ட் ஆக இருந்தார். மாணவன் (1970) படத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின் குட்டி பத்மினியுடன் ஒரு பாடல் காட்சியில் ஆடிப்பாடினார். "விசிலடிச்சான் குஞ்சுகளா! குஞ்சுகளா! வெம்பிப் பழுத்த பிஞ்சுகளா! பிஞ்சுகளா!" இந்தப் பாடலில் கமலுக்கு ஒரு குளோசப் ஷொட் கூட கிடையாது.

தொடர்ந்து கமல் டான்ஸ் அஸிஸ்டண்ட் ஆகத்தான் கொஞ்சகாலம்; அன்னை வேளாங்கண்ணி(1971)யில் அஸிஸ்டண்ட் டைரக்டர். அதில் ஸ்ரீவித்யாவுடன் நடித்த காட்சி படத்தில் இடம்பெறவில்லை. ஜெமினி கணேசன் டைரக்டர் ஸ்ரீதரிடம் கூட்டிக்கொண்டு போனார். கமலைப் பார்த்து விட்டு ஃபோட்டோஜெனிக் ஃபேஸ் கிடையாது என்று அபிப்பிராயப்பட்ட டைரக்டர் ஸ்ரீதர் அஸிஸ்டண்ட் டைரக்டராகச் சேர்த்துக்கொள்ளமுடியும் என்று சொன்னாராம்.

குறத்தி மகன் (1972) படத்தில் நிறைய காட்சிகளில் நடிக்க வாய்ப்பே இல்லாமல், முக்கிய ரோல் செய்த செயற்கையான நாடக பாணி நடிகர் மாஸ்டர் ஸ்ரீதரைப் பார்த்து. "ராஜா வாழ்க" என்று கோஷம் போட்டுக் கொண்டு நடிக்க வேண்டியதாகிப்போனது. ஆர்.சி. சக்தியிடம் கமல் "படத்தில என்னை கே.எஸ்.ஜி ஒரு ஓரமாக நிறுத்திட்டாருண்ணே" என்று தேம்பினார்.

அடுத்து அரங்கேற்றம் (1973) படத்தில் நிறைய காட்சிகளில் நடிக்க வேண்டியிருந்தது. முன்னூறு ரூபாய் தான் கொடுத்தார்களாம். சொல்லத் தான் நினைக்கிறேன் (1973) படத்தில் வில்லன் ரோல். அந்தப் படத்தில் ரசிகர்கள் கவனம் பெற்று விட்டார்.

அவள் ஒரு தொடர்கதை (1974), அபூர்வ ராகங்கள் (1975), மன்மதலீலை (1976) அதன் பின் நடந்ததெல்லாம் சரித்திரம்.

1976இல் நடிகை ஸ்ரீதேவி கமலுடன் மூன்று முடிச்சு படத்தில் நடித்தார். குழந்தை நட்சத்திரங்களில் கமல் ஹாசனும் ஸ்ரீதேவியும் மட்டுமே அகில இந்திய அளவில் நட்சத்திரமாக பிரகாசித்து, சாதித்து விட்டார்கள்.

# கடவுள் யார் பக்கம்?

ஒருநாள் மாலை நன்கு இருட்டிவிட்ட சமயம் மழை கொட்டிக் கொண்டிருந்தது.

ஒரு கோயில் வளவுக்குள் நின்ற வேப்ப மரத்தில் நிறைய காக்கைகள், "கா கா" என்று கத்தியபடி தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன.

அப்பொழுது ஒரு சின்ன மைனா அங்கு பறந்து வந்தது. மழைக்காக அந்தக காகங்கள் இருந்த மரத்தின் ஒரு கிளையில் வந்தமர்ந்தது. அதைக்கண்ட காகங்கள் மைனாவைத் துரத்த ஆரம்பித்தன.

மைனா சொல்லிற்று: "இன்று சீக்கிரம் இருட்டிவிட்டது. அதனால் என் கூட்டைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே இன்று இரவு மட்டும் என்னை இங்கே தங்க விடுங்கள்".

"அதெல்லாம் முடியாது. இந்தக் கோயில் மரம் எங்களுக்குத்தான் சொந்தம். நாங்கள் நெடுங்காலமாக இங்கே வாழ்ந்து வருகிறோம். கடவுளுக்குப் பாரமாக மேலும் புதிதாக யாரையும் சேர்த்துக்கொள்ள முடியாது. நீ ஓடிப் போய்விடு" என்றன காக்கைகள்.

"கடவுள் எல்லோருக்கும் தானே சொந்தம். இந்தக் குளிர்காலத்தில் ஆலங்கட்டிகள் விழுந்தால் யாரும் தப்ப முடியாது. நான் சின்னப் பறவை. என்னை உங்கள் சகோதரியாகக் கருதி இன்று இரவு மாத்திரம் தங்க விடுங்கள்" என்று கெஞ்சியது மைனா.

"உன்னைப் போன்ற சகோதரி எங்களுக்குத் தேவையில்லை. கடவுளால் எல்லோரையும் காப்பாற்ற முடியாது. நாங்கள் அவரது இடத்தில் - அவரது தயவில் வாழ்கிறவர்கள். நீ யாரென்று எங்களுக்குத் தெரியாது. உன்னைச் சேர்த்துக்கொண்டு நாங்களும் கஷ்டப்பட முடியாது. எங்காவது ஓடிப் போய்விடு" என்றன காக்கைகள்.

காகங்கள் துரத்த ஆரம்பிக்கவே வேறு வழியின்றி பறந்து சென்று தூரத்தில் இருந்த ஒரு மாமரத்தில் போய்த் தங்கியது மைனா.

அன்று இரவு பலத்த மழையுடன் காற்றும் அடித்து, ஆலங்கட்டிகள் பொத்து பொத்தென்று விழ ஆரம்பித்தன. கூடுகளுக்கு வெளியே வந்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த காகங்கள் மீது ஆலங்கட்டிகள் விழ, அவையெல்லாம் அடிபட்டுக் கீழே விழுந்தன. முக்கால்வாசி காகங்கள் இறந்துவிட, மற்றையவை காயங்களுடன் விழுந்தன.

மைனா, தான் தங்கிய மாமரத்தில் அவசர அவசரமாக ஒரு பொந்தைத் தேடிக் கண்டுபிடித்து அதற்குள் இருந்த தடைகளை அகற்றி, நுழைவதற்கு வழி ஏற்படுத்திக்கொண்டு உள்ளே புகுந்து கொண்டது. ஆலங்கட்டிகளினால் அதற்கு ஓர் ஆபத்தும் ஏற்படவில்லை.

பொழுது விடிந்ததும் மைனா, தன் கூட்டைத் தேடிக்கொண்டு பறந்து செல்கையில், வழியில் காகங்கள் தங்கியிருந்த கோயில் வேப்ப மரத்தின் பக்கமாகச் செல்ல வேண்டியிருந்தது.

கீழே அடிபட்டு விழுந்திருந்த ஒரு காகம், மைனாவைப் பார்த்து, "சகோதரியே, இரவு எங்கு தங்கியிருந்தாய்? ஆலங்கட்டிகளிடமிருந்து உன்னைக் காப்பாற்றியது யார்?" என்று முனகலோடு கேட்டது. "துன்பத்தில் அகப்பட்ட உதவியற்ற ஜீவன்களை அந்தக் கடவுளைத் தவிர வேறு யாரால் காப்பாற்ற முடியும்? ஆனால் அவர் தன்னைத் துதிக்கிறவர்கள் பக்கமல்ல; முயற்சியுடையவர்கள் பக்கமே இருக்கிறார்" என்று சொல்லிப் பறந்தது மைனா.





# குழந்தைகளுக்கு விழா!

துருக்கியில் ஒவ்வொரு ஆண்டும், ஏப்ரல் 23ஆம் தேதியை, குழந்தைகள் தினமாக கொண்டாடுகின்றனர். "பைராமி" என்றால், துருக்கி மொழியில், தேசிய பொது விடுமுறை நாள்




என்று பொருள். 1920இல், துருக்கி சுதந்திரம் அடைந்த போது, அதன் அன்றைய தலைவர், முஸ்தபாமெகல் அட்டுர்க், "இனி, குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலம்..." எனக் கூறி, ஏப்ரல் 23ஆம் திகதியை ஒவ்வொரு ஆண்டும், இனி, குழந்தைகள் தினமாக கொண்டாட வேண்டும் என அறிவித்தார்.

விழா நாளன்று, குழந்தைகள், அந்த நாட்டிற்கே உரிய, இரட்டை வண்ணமான சிவப்பு மற்றும் வெள்ளையில் ஆட்டம், பாட்டமாக கொண்டாடுகின்றனர். இந்த விழா, துருக்கியின் தலைநகரமான அங்காராவில், மிகச் சிறப்பாக நடைபெறும்.

இந்த விழாவுக்கு, உலகம் முழுவதிலிருந்தும், குழந்தைகள் வந்து பங்கு கொள்கின்றனர். யுனெஸ்கோ நிறுவனம், ஏப்ரல் 23ஆம் திகதியை, சர்வதேச குழந்தைகள் தினமாக அங்கீகரித்துள்ளது.

# வானிலிருந்து விழும் "நட்சத்திரம்"

- என்.ராமதுரை -



நிலவற்ற நாட்களில் இரவு வானைக் கவனித்தால் திடீரென்று பிரகாசமான ஒளிக் கீற்று வேகமாகக் கீழ் நோக்கி இறங்கும். சில கணங்களில் அது மறைந்து விடும். கிராமப் புறங்களில் இக்காட்சியை நன்கு காண முடியும். "நட்சத்திரம் கீழே விழுகிறது" என்று பலரும் இதைத் தவறாக வருணிப்பர்.

காற்று மண்டலம் வழியே கீழே இறங்குவது நட்சத்திரம் அல்ல. வான மண்டலம் வழியே இவ்விதம் கீழே இறங்கும் ஒளிக் கீற்றானது நட்சத்திரமே அல்ல. விண்வெளியிலிருந்து மிளகு சைஸிலான சிறிய கல் துணுக்கு அல்லது அதை விடச் சிறிய மணல் துணுக்கு ஒன்று காற்று மண்டலத்தில் நுழைய நேரிட்டால் இவ்விதம் தீப்பற்றி கீழ் நோக்கி இறங்கும். இவ்விதத் துணுக்குகள் முற்றிலுமாக எரிந்து பொடியாகி அந்தப் பொடி காற்றோடு கலந்து பூமியில் வந்து சேரலாம். ஆக, சிறிய துணுக்கு தான் இவ்விதம் ஷோ காட்டுகிறது.

நட்சத்திரம் ஒன்று பூமியை விட பல ஆயிரம் அல்லது பல இலட்சம் மடங்கு பெரியது. அத்துடன் நட்சத்திரங்கள் பூமியிலிருந்து பல நூறு கோடி கிலோ மீற்றர் அப்பால் உள்ளவை. சொல்லப் போனால் பெரும்பாலான நட்சத்திரங்கள் பயங்கர வேகத்தில் பூமியிலிருந்து மேலும் மேலும் அப்பால் விலகிச் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே எந்த நட்சத்திரமும் பூமியை நெருங்க வாய்ப்பே கிடையாது. ஆகவே "நட்சத்திரம் விழுகிறது" என்பது முற்றிலும் தவறான விளக்கம்.

விண்வெளியில் எண்ணற்ற விண்கற்கள் (Asteroids) உள்ளதை அறிவோம். பறக்கும் மலை என்று சொல்லத்தக்க விண்கல்லிலிருந்து நம் வீட்டு அம்மிக்கல் வரை வெவ்வேறு அளவுகளில் விண்கற்கள் உள்ளன. இவை அல்லாமல் வீதி போடுவதற்குப் பயன்படும் சல்லிக்கல், கூழாங்கல் அளவிலும் விண்கற்கள் உள்ளன. தவிர மணல் துணுக்குகள், தூசு முதலியவையும் விண்வெளியில் உள்ளன. இவை தோன்றியது எப்படி?

செவ்வாய் கிரகத்துக்கும் வியாழன் கிரகத்துக்கும் இடையே Main Asteroid Belt உள்ளது. சூரியனைச் சுற்றி வரும் இந்த பல இலட்சம் அஸ்டிரோய்ட்கள் அணிவகுத்துச் செல்கையில் ஒன்றோடு ஒன்று மோதி உடைகின்றன. இவ்வித மோதல்களின் போது தோன்றும் துண்டு துணுக்குகள், மணல், தூசு ஆகியவையும் பூமி இருக்கின்ற வட்டாரத்துக்கு வந்து சேர்ந்து பூமியின் காற்று மண்டலம் வழியே கீழே இறங்குகின்றன. அப்போது தான் "நட்சத்திரம் விழுவது போன்ற காட்சி" தோன்றுகிறது.

வால் நட்சத்திரங்கள் உடைவதால் ஏற்படுகின்ற தூசு, இயல்பாக விண்வெளியில் உள்ள தூசு முதலியவையும் இவ்விதம் பூமிக்குள் வந்து இறங்குகின்றன. ஓர் ஆண்டில் சுமார் 10 ஆயிரம் தொன் எடை அளவுக்கு இவை பூமியில் வந்து விழுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரங்கள் வந்து செல்லும் போது ஏராளமான நுண்ணிய துகள்களை விட்டுச் செல்லும். அத்துகள்கள் விண்வெளியில் பரவி நிற்கும். பூமி தனது பாதையில் அத்துகள்களின் ஊடே செல்லும் போது அத்துகள்கள் வான் மண்டலம் வழியே கீழே இறங்கும். அப்போது எண்ணற்ற ஒளிக்கீற்றுகள் தென்படும். இதை ஒளிமழை (Meteor Shower) என்று கூறுவார்கள். இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

ஆண்டில் சில மாதங்களில் இவ்விதம் ஒளிமழையைக் காணலாம். மேலை நாடுகளில் ஆர்வலர்கள் இரவில் ஊருக்கு வெளியே வாய்ப்பான இடங்களில் கூடி இதைக் காண்பர்.

# கெயில் டேவர்ஸ்




1966 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் உள்ள சியாட்டில் என்ற நகரத்தில் பிறந்தவர் கெயில் டேவர்ஸ்.

1988ஆம் ஆண்டு தென் கொரியாவில் சியோலில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டியில் நூறு மீற்றர் வேக ஓட்டப் பந்தயத்தில் முதலாவதாக வந்து தங்கப்பதக்கம் பெற வேண்டும் என்று விரும்பினார். அவர் ஆசைப்பட்டது நிறைவேறுவது சாத்தியமே. ஏனெனில் 1987ஆம் ஆண்டில் அவர் வேகப் பந்தய ஓட்டத்தில் அமெரிக்காவில் இரண்டாவது இடத்திலும் தடைதாண்டி ஓட்டத்தில் உலக அளவில் ஏழாவது இடத்திலும் இருந்தார்.

அந்தச் சமயத்தில் அவருடைய நூறு மீற்றர் ஓட்டத்தின் சாதனை 10.98 விநாடியாக இருந்தது. இந்த நேரத்தை இன்னும் குறைத்து, ஒலிம்பிக்ஸில் வெற்றி பெற வேண்டும் என்று கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார். அவருடைய பயிற்சியாளரும் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார் என்று முழுமையாக நம்பினார்.

ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளத் தேர்வு பெற்று, சியோல் சென்றார். ஆனால் அங்கு நடந்த கால் இறுதி மற்றும் அரை இறுதிப் போட்டிகளில் கலந்துகொண்டு ஓடியபோது வெற்றிவாய்ப்பை இழந்து, மிகுந்த அதிர்ச்சியடைந்தார்.

பல ஓட்டங்களில் வெற்றி பெற்ற அவருக்குத் திடீரென்று என்ன ஆயிற்று?

தனது கால்களில் சக்தி குறைந்து கொண்டு வருவதை உணர்ந்தார். கால்கள் வேகமாக ஓட ஒத்துழைக்கவில்லை. ஒலிம்பிக்கில் வெற்றிபெற வேண்டும் என்ற அதிக ஆவேசத்தினால், எதிர்பாராமல் அவரது மனம் பாதிக்கப்பட்டு, அதனால் உடலின் செயல்பாடுகள் குறைந்தனவா? அல்லது வேறு ஏதாவது காரணங்களினாலா?

ஓடி ஓடிப் பயிற்சி செய்ததாலா? உடலில் ஏற்பட்ட தளர்ச்சியாலா? என்ன காரணம்? அவரது உடல் சில நேரங்களில் காரணம் இல்லாமல் நடுங்கியது. கால்களில் பயங்கர வலி ஏற்பட்டது. பல டாக்டர்களும் ஒரு கட்டத்தில் இரண்டு முழங்கால்களிலும் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டும் என்று கருதினர்.

கடைசியில் டாக்டர்கள் கண்டுபிடித்த காரணம் - அவருடைய தைரோய்ட் சுரப்பிகள் பாதிக்கப்பட்டிருந்தன என்பதுதான். ஆனால் அதற்கு நிவாரணம் தரும் மருந்துகளில் இருந்த இரசாயனப் பொருட்கள், ஒலிம்பிக் சங்கத்தால் தடை செய்யப்பட்டவையாகும். அவற்றை உட்கொண்டால் அவர் இனி எக்காலத்திலும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாமல் போய்விடும்.

அதற்காக மாற்றுச் சிகிச்சை முறைகளை கெயில் டேவர்ஸ் நாடினார். வேறுவகை மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்தார். உடல்நிலை படிப்படியாகத் தேற ஆரம்பித்தது.

அவர் மனம் தளரவில்லை. 1992ஆம் ஆண்டின் ஒலிம்பிக் போட்டிகளில் "எப்படியாவது தங்கம் வெல்வேன்" என்று கனவு கண்டு கொண்டிருந்தார். அவருடைய பயிற்சியாளரும் இந்தக் கனவை நிறைவேற்ற பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

முதலில் கெயில் டேவர்ஸ் வீட்டுக்குள்ளேயே நடக்க ஆரம்பித்தார். பின்னர் வெளியில் நடக்க ஆரம்பித்தார். பிறகு சற்று நீண்டதூரம் நடக்க ஆரம்பித்தார். சிறிது தூரம் ஓடிப் பார்த்தார். பின்னர் விளையாட்டு மைதானங்களுக்குச் சென்று ஓட ஆரம்பித்தார். அவருடைய பயிற்சியாளரும் மிகுந்த நம்பிக்கையை ஊட்டிக்கொண்டிருந்தார்.

சிறிது காலத்துக்குள்ளேயே பழைய நிலைக்குத் திரும்பினார் கெயில். பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகளைப் பெற ஆரம்பித்தார். ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்ள விரைவிலேயே தேர்வு செய்யப்பட்டார்.

1992ஆம் ஆண்டு ஸ்பெயினின் பார்ஸிலோனாவில் நடந்த ஒலிம்பிக்ஸில் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு எல்லோரும் ஆச்சரியப்படும் விதத்தில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

தளராத மன உறுதியும் இலட்சிய வேட்கையும் சாதனைகள் புரிய வழிகாட்டியாகத் திகழும் என்று நிரூபித்தார்.

# பிராணிகளின் தூக்கம்!

நாய், பூனை போன்ற விலங்குகள் உடம்பைச் சுருட்டிக் கொண்டு உடலின் வெப்பத்தைக் காப்பாற்றத் தலையை உடலின் உள்ளே புதைத்துக் கொண்டு தூங்கும்.

ஆடு, மாடு, மான் போன்றவை நான்கு கால்களையும் மடித்து தலையை உடலின் மேல் வைத்துத் தூங்கும்.

யானை, குதிரை போன்றவை நின்றுகொண்டே தூங்கும். யானை தூங்கும்போது அதன் எடை முழுவதையும் ஒவ்வொரு காலுக்கும் மாற்றி மாற்றி வைத்துத் தாங்கிக் கொள்ளும்.

பாம்பு வகையைச் சேர்ந்தவை அனைத்தும் உடலை கடிகார ஸ்பிரிங் போல சுருட்டிக்கொண்டு தூங்கும். பாம்புகள் தூங்கும்போது கண்கள் திறந்த வண்ணமே இருக்கும்.

சிலவகை மான்கள் தூங்கும்போது தமது சுவாச சக்தியின் மூலம் பகை விலங்குகளின் நடமாட்டத்தை உணர்ந்து கொள்ளும் அபூர்வ சக்தி கொண்டவை.

# 10,000 அடி உயரத்தில்



குரங்குகள் மலைப் பகுதிகளில் அதிகம் காணப்படும் என்பது நமக்கெல்லாம் தெரிந்த விஷயம்தான். ஆனால் மிக அதிகமான மலைகள் இருக்கும் பகுதிகளில் குரங்குகளைப் பார்க்க முடியுமா? முடியும்.

சீனாவிலுள்ள திபெத்திய பீடபூமியின் தென் பகுதியில் காணப்படும் தங்க நிறக் குரங்குகள் 10,000 அடி உயரமான மலைகளில் அதிகம் வசிக்கின்றன. இவை அபூர்வ வகையைச் சேர்ந்தவை.

பனிக்காலத்தில் இவ்வை கடுங்குளிரைத் தாங்க முடியாமல் மலையடிவாரத்துக்கு வந்துவிடும். இவற்றின் உடல் நீளத்துக்கு வாலின் நீளமும் இருக்கும். வால் இரண்டரை அடி நீளம் வரை இருக்கும்.

# இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் தேர்த்திருவிழா சிறப்புமலர் - 2013





## ஆசிச்செய்தி



மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் பெருவிழா 16.04.2013 அன்று சிறப்பான முறையில் ஆரம்பமாகி நடைபெற்று வரும் இவ் வேளையில் இரதோற்சவம் இன்று 24.04.2013 அம்பாள் ரத்தில் ஆரோகணித்து மக்களின் மலங்களை சம்காரம் செய்து உயர்ந்த மக்களாக உன்னத பிரஜைகளாக ஒன்றுபட்டு வாழ அருள் பாலிக்க வேண்டும் என ஆசி கூறி அமைகின்றேன்.

மகோற்சவ சிவாச்சாரியார்
சிவாகம கிரியாபூஷணம்
சிவஸ்ரீ பாலசாந்தினி கேசக்குருக்கள

## துன்பங்கள் நீங்கி துணிவு பெறுக



கிளிநொச்சி மாவட்டத்தின் வாழ்நிலையில் இரணைமடு நீர்த்தேக்கத்தின் பங்களிப்பு மிக மிக காத்திரமானது. இவ்வகையில் இப்பெரும் நீர்ப்பாசன மூலத்தைக் காத்து எவ்வித இடர்களும் வராது பாதுகாக்கும் பெரும் பணியை இக் குளத்தின் இடது கரையின் அருகில் அமைக்கப்பட்டுள்ள கனகாம்பிகை அம்மன் ஆலயமே என்ற பெரு நம்பிக்கையோடு பல விவசாயிகளும்,பொதுமக்களும் நம்புவதுடன் இவ்வாலயம் மீதும் அதீத கவனிப்பைச் செலுத்தி வந்துள்ளனர். இதனால் தான் சித்திரத்தேர் ஓடும் இம்மாவட்டத்தின் முதலாவது ஆலயமாக இவ் ஆலயம் தனது முத்திரையை பொறிக்கவும் காரணமாகியுள்ளது.

திருமதி. றூ. கேதீஸ்வரன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி மாவட்டம்.


Suvarna Jewelers
சுவர்ணா ஜூவலர்ஸ்
Kanagapuram Road,
Kilinochchi.
Tel : 021-4925687
Mobile : 077-3268381
Email : vsthavam@gmail.com

வேழன் பதிப்பகம்
கணனி மூலம் வடிவமைத்து ஓவ்செ மிசினில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளவும், றபர்ஸ்ராம் லெமனேற்றிங் டிஜிற்றல் பிறின்றிங் கணனி தட்டச்சு, போட்டோக் கொப்பி மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளும் செய்து கொள்ள
வேழன் பதிப்பகம்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
0212285579 T.P - 0772718640.
E.mail-Velanpathippagam@gmail.com

பிள்ளையார் டிஜிற்றல் பிறிண்ட்
அதிநவீன டிஜிற்றல் மிசின் மூலம்
குறைந்த விலையில் மிக விரைவாகப்
பெறலாம்
0777003941
021 4919009
49,
கனகபுரம் வீதி
கிளிநொச்சி

Ajantha Enterprises
அஜந்தா என்றபிறைசஸ்
Dealers for all kind of Glasses
Aluminium Fittings &
Framing Materials
Deport Road,
Kilinochchi.
Tel: 077-5214091

நியூ பொன்மஹால் ஜுவலர்றி
New Ponmahal Jewellery
அசல் 22 கரட் தங்க நகைகளை ஓடர் மூலம் சிறப்பு தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் மனங்கவர்ந்த டிசைன்களில் செய்து பெற்றுக்கொள்ள...
நியூ பொன்மஹால் ஜுவலர்றி
Uthayanagar Junction, Kilinochchi. Tel: 077-8803883
உதயநாகர் சந்தி, கிளிநொச்சி

வவுனியா ஒப்டிகல்
VAVUNIYA OPTICAL
கண் கண்ணாடி அகம்
இலவசமாகக் கண் பரிசோதிக்கப்பட்டு
கண்ணாடி வழங்கப்படும்
No. 30, Bus Stand Complex, Vavuniya.
Tel: 021-4925971
Kanagapuram Road, Kilinochchi.
Tel: 021-4925972

பொதிகை சலூன்
Pothikai Saloon
சிகை அலங்காரப் பொருட்கள்
விற்பனைக்கு
உண்டு
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
T.P 0215685089
0775715111
0770764044
உரிமையாளர்
பொ. சூரியகுமார் (சகிந்தன்)
கிளிநொச்சி.

Parththeepan Art
DIGITAL PRINTING
Kachcheri Opp Kilinochchi,Kanakapuram Road, Kilinochchi 0777402847
பார்த்தீபன் ஆட்ஸ்
டிஜிற்றல் பிறிண்டிங்
Kachcheri opp A-9 Road, Kilinochchi.
சகல விதமான டிஜிற்றல் பிறிண்டிங் வேலைகளும் செய்து தரப்படும்.
கச்சேரி முன்பாக கிளிநொச்சி, கிளை: கனகபுரம் வீதி, கிளிநொச்சி. T.P:0777402847

# பாரம்பரிய விளையாட்டுக்கள் பாதுகாக்கப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் பாரம்பரிய விளையாட்டுக்களைப் பின்பற்றுகின்ற தன்மை மருகி வருகின்றது. எனவே, எதிர்காலத்தில் தமிழ்ப் பாரம்பரிய விளையாட்டுகளுக்கும் எமது விளையாட்டு வீரர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இன்று யாழ்.மாவட்டத்தின் விளையாட்டுத்துறையின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது எமது மாவட்டத்தில் இயங்கும் கழகங்கள் தேசிய ரீதியில் மற்றும் மாகாண ரீதியில் நடாத்தப்படும் போட்டிகளில் கூட முழுமையாகப் பங்கு கொள்வதில்லை. இந்நிலைமை தொடருமானால் காலப்போக்கில் எமது மாவட்டத்தில் விளையாட்டுத்துறையின் இருப்பே கேள்விக்குறியாகிவிடும்.

இதேவேளை எமது விளையாட்டுக்கழகங்கள் தமிழரின் பாரம்பரிய விளையாட்டுக்களை அழியவிடாது பாதுகாப்பதற்கும் முயற்சிக்கவேண்டும். கிராமப்புறங்களில் நடைபெறும் விழாக்களின்போது இவ்வாறான விளையாட்டுக்கள் நடைபெற்றுவந்த போதும் யாழ்.மாவட்டத்தில் பாராம்பரிய விளையாட்டுக்களை பின்பற்றுகின்ற தன்மை காணப்படுவதில்லை எனவே எதிர் காலத்தில் தமிழ்ப்பாரம்பரிய விளையாட்டுகளுக்கும். எமது விளையாட்டு வீரர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்

எமது விளையாட்டுத்துறையை வளர்ப்பதற்கும், அதை பாதுகாப்பதற்கும் அரசாங்கம் இன்று பல்வேறுதிட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்றது. அவற்றில் மாகாண,மாவட்ட பிரதேச மட்டங்களில் அனைத்து வசதிகளுடனும் கூடிய விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வட மாகாணத்திற்கான சர்வதேச தரத்திலான மைதானத்தினை அமைக்கும் பணி கிளிநொச்சியில் சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை விஸ்த்தரிப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இத்திட்டம் மாவட்ட பிரதேசசெயலர் பிரிவுகளுக்கும் விஸ்தரிக்கப் படவுள்ளது என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வலி.மேற்கு பிரதேசசபை உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) வலி.தென் மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் வெலிர் ஜோர் அன்ரன்ஜோன்சன் (ஜீவா), பிரதேசசெயலக உத்தியோகஸ்தர்களும் கிராமசேவையாளர்களும் விளையாட்டுக்கழகங்களின் அங்கத்தவர்களும் விளையாட்டு ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

# வலிகாமம் கல்வி வலய தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட தமிழ்தினப்போட்டியில் முதல மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளன. விபரங்கள் வருமாறு:

பேச்சு பிரிவு-1

வி.துஸன்ஜ (மகாஜனாக்கல்லூரி), அ.அனோஜா (யாழ்ப்பாணக்கல்லூரி), ர.நிசாந் (மானிப்பாய் மகளிர் கல்லூரி),

பிரிவு-2

அ.மேரி லக்சிகா (இளவாலை கன்னியர் மடம்), ஜெ.நிதுஷாரன் (யாழ்ப்பாணக்கல்லூரி), கி.ரவீந்திரன் (சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி),

பிரிவு-3

அ.ரூபகன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), ஜெ.விநோதினி (வட்டு. மத்திய கல்லூரி), தி.சாருகா (உடுவில் மகளிர் கல்லூரி),

பிரிவு-4

ப.குருபரேசன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி), க.குகவர்மன் (மகாஜனாக்கல்லூரி), இ.இனோசா (அருணோதயாக்கல்லூரி),

பிரிவு-5

அ.சாம்பவி (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ஸ்ரீ.அனுசியா(வட்டு. இந்துக்கல்லூரி), கு.தயாளினி (இணுவில் மத்திய கல்லூரி),கி.விஸ்ணுகா (மகாஜனாக்கல்லூரி),

பாவோதல் பிரிவு-1

ந.அபிராமி (சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்), த.சோபனா (மகாஜனாக்கல்லூரி), ப.பிரவீணன்(யாழ்ப்பாணக்கல்லூரி), கு.அபினா (மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்),

பிரிவு-2

வி.டிலக்சனா(மல்லாகம் ம.வி), க.வித்தகன் (மகாஜனாக்கல்லூரி), ஈ.கனிஸ்டா (கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி),

பிரிவு-3

லோ.சிறிகர்ஷன்(யாழ்ப்பாணக்கல்லூரி), ச.நிரோஜா (வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம்), இ.துஸயந்தன்(வட்டு. மத்திய கல்லூரி),(தொடரும்...)(06)

# பூநகரி வாடியடிப்பகுதியில் பஸ்தரிப்பு நிலையம் திறப்பு



பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் பேருந்துக்காக காத்து நிற்கும் பாடசாலை மாணவர்கள, பயணிகள ஆகியோர் கஷடத்தை அவதானித்த பூநகரிபபகுதி இராணுவத்தினர் தமது செலவில் பஸ்தரிப்பு நிலையத்தங்குமிடத்தை அழகுற அமைத்து சென்ற வாரம் மக்கள் பாவனைக்காக வழங்கியுள்ளனர்.

இப்பகுதியில் முன்னர் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று இல்லாமல் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வந்தனர். இந்நிலையில் தற்போது பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப் பட்டமையால் வெயிலில் காயாது தாம் பேருந்துக்காக காத்திருப்பதாக தெரிவிக்கின்றனர்.

கேந்திர ஸ்தானமாகிய இச்சந்தியில் ஓர் பஸ்தரிப்பிடத்தை நிறுவி உதவவேண்டுமென்ற கோரிக்கையை அடுத்து பூநகரிப் பிரதேச சபையில் 10 மாதங்களுக்கு முன் தீர்மானம் எடுத்தும் இதுவரை பிரதேசசபை நிர்வாகம் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாமை பற்றி முன்னர் தினமுரசு பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(112)

# ஆயுர்வேதம்



## இதயப் பாதிப்புகளின் எதிரி - கசப்பும், துவர்ப்பும்!

இப்போதெல்லாம் இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் இளம் வயதினருக்கும் கூட சகஜமானதாக உள்ளன. நவீன வாழ்க்கை முறைகளும் தவறான உணவுப் பழக்கங்களும் இரத்தத்திலுள்ள கெட்ட கொலஸ்ட்ரோலை அதிகப்படுத்தி இதய உபாதைகளை அதிகம் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

உணவிலுள்ள ருசியின் வாயிலாக மனிதர்கள் அடையும் நன்மை, தீமைகளை பாஞ்ச பௌதிக சித்தாந்தத்தின் மூலமாக ஆயுர்வேதம் வெகு சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. நிலமும் நீரும் அதிகம் கொண்ட இனிப்புச் சுவையையும், நெருப்பும் நிலமும் அதிகம் கொண்ட புளிப்புச் சுவையையும், நீரும் நெருப்பும் அதிக அளவில் உள்ளடக்கிய உப்புச் சுவையையும் விரும்பி ஏற்பவர்களுக்கு, அவற்றின் வரவு குடல் வழியாக, நாளங்களில் சேர்க்கப்படும் தறுவாயில், உட்புற நாளச் சுவர்களில் படிவங்களாகப் படிவதாகக் கூறுகிறது. நெய்ப்பும், கனமும், மந்தமும், வழுவழுப்பும் கூடிய குணங்கள் இந்தப் படிவங்கள் மூலமாக, உடலெங்கும் கூடும்போது, அதுவே கெட்ட கொலஸ்ட்ரோலாக மாறுகிறது. அதிக உழைப்பில்லாமல், ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்களுக்கும், பகலில் உணவைச் சாப்பிட்ட பிறகு படுத்து உறங்குபவர்களுக்கும், நிலம் மற்றும் நீரின வரத்து கூடுவதால் இதயத்தின் பளுவைக் கூட்டி இதய நோய்களை உண்டாக்குவதோடு, கெட்ட கொலஸ்ட்ரோலையும் கூட்டிச் சேர்க்கிறது.

வாயு மற்றும் ஆகாயத்தை அடக்கிய கசப்புச் சுவை, இதற்கு வாயு மற்றும் நிலத்தைக் கொண்ட துவர்ப்புச் சுவை, நெருப்பு மற்றும் வாயுவை அதிகம் கொண்ட காரம் போன்ற சுவைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொண்டால், உடலில் வறட்சி, லேசு, நகரும் தன்மை போன்றவை கூடுவதால், உட்புறப் படிவங்களைச் சுரண்டி, அவற்றில் படிந்துள்ளவற்றை நீர்க்கச் செய்தோ, வறளச் செய்தோ குணப்படுத்த முடியும்.

கசப்பு - துவர்ப்புச் சுவையின் மீது இன்றைய தலைமுறையினருக்கு நாட்டம் குறைவாக இருப்பதாலும், எந்நேரமும் கணனி முன் அமர்ந்து வேலை செய்வதாலும், பள்ளிகளில் விளையாடும் நேரம் குழந்தைகளுக்குக் குறைந்து வருவதாலும், நொறுக்குத் தீனிகளின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள மோகத்தாலும், தண்ணீருக்கு மாற்றாக குளிர்பானங்களையே குடிக்க விரும்புவதாலும், இன்று மக்களிடையே இதய பாதிப்புகள் அதிகம் ஏற்படுகின்றன.

பொன்னாங்கண்ணி, அகத்திக் கீரை, மணத்தக்காளிக் கீரை, முருங்கைக்கீரை, கரிசலாங்கண்ணிக் கீரை போன்றவற்றை வாரத்தில் ஒருமுறையாவது சாப்பிடுவதால், உடல் உட்புறக் கழிவுகள் வெளியேற வாய்ப்பு ஏற்படும். காலையில் மலம் சிறுநீர் கழித்த பிறகு, பல் தேய்த்து, வாயினுள் கிராம்பு, சோம்பு, ஓமம் போன்றவற்றை அடக்கிக் கொண்டு நடைப் பயிற்சியை சுமார் 45 நிமிடங்கள் முதல் 1 மணி நேரம் வரை செய்வதால், உடலில் ஏறும் உட்புறச் சூட்டினால், தேவையற்ற கனமான வஸ்துக்களை, இரத்தத்திலிருந்து நீர்க்கச் செய்து வியர்வை மூலமாகவும், மலரூபமாகவும் வெளியேற்றுவதால், கெட்ட கொழுப்பைக் குறைத்து இதயத்தின் வேலைத் திறனை மேம்படுத்திவிட முடியும். பாடசாலைகளில் குழந்தைகளுக்கு பாவற்காய், கோவ்வைக்காய், வாழைப்பூ போன்றவற்றைச் சாப்பிடுவதால் ஏற்படும் நல்ல பலன்களை எடுத்துச் சொல்லி, அவர்களை அவற்றைச் சாப்பிடுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். எளிமையான வாழ்க்கைமுறைத் தத்துவங்களை சிறுவயது முதலே பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்து வந்தால், அதிகப் பணம் கொடுத்து வாங்க வேண்டிய மேலை நாட்டு உணவுப் பண்டங்களின் மோகத்தை அவர்கள் விட்டுவிடுவர்.

உடலெங்கும் நல்லெண்ணெய் தேய்த்து, வெந்நீரில் குளித்து, அன்றைய தினம் மிளகு, சீரக இரஷம், கறிவேப்பிலைத் துவையல், கடைந்து வெண்ணெய் நீக்கிய மோர் என்ற வகையில் உணவை அமைத்துக் கொண்டால், கெட்ட கொலஸ்ட்ரோல் வெளியேறி, இதயத்தின் தசைநார்களின் வலுவைக் கூட்ட முடியும்.

உணவைச் செரிக்கச் செய்யும் திறன் குன்றாமலிருந்தாலே, இதய நோய்களின் தாக்கமின்றி வாழ முடியும் என்று ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. ஹிங்குவசாதி சூரணம், தசமூலாரிஷ்டம், ஜீரக வில்வாதி லேகியம், அர்ஜுனாரிஷ்டம் போன்ற பல தரமான மருந்துகளின் உபயோகத்தைச் சரியான அளவில் பயன்படுத்தி வந்தால், உடலின் உட்புற அழகு மேம்படும். உறுப்புகளின் செயற்பாடுகள் அனைத்தும் திருப்திகரமாக இருக்கும். கெட்ட கொலஸ்ட்ரோல் வளராது. இதயம் சீரான வேகத்தில் இயங்கும்.

# இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட வறிய தாயொருவரின் உதவிக்கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு தெற்கு குரவிலை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயும், ஊனமுற்ற ஒருவரின் மனைவியுமான நவநாதன் அன்னலட்சுமி (வயது 30) என்பவர் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.போதனாவைத்திய சாலைக்கு சென்று மாதம் தோறும் இரத்த சுத்திகரிப்பு செய்து வருகின்றார்.

இவரது கணவர் கண்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்.

இவரது சிறுநீரக மாற்றத்திற்கான நிதிவசதியின்றி காணப்படுகின்றார்.

இவருக்கு சிறுநீரக மாற்றத்திற்கு உதவிபுரிய விரும்புவோர் அவரது நேரடி முகவரியிலோ, தொலைபேசி 077 279 4129, 077 536 7629 என்னும் இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ளலாம். அல்லது இலங்கை வங்கி முல்லைத்தீவுக் கிளை, 720 71348 என்ற கணக்கு இலக்கத்திற்கோ உதவி புரியமுடியும். அத்துடன் இவர் பொது நலன் சார்ந்த நிறுவனங்களின் உதவியையும் நாடிநிற்கின்றார்.

# உடையார்கட்டு "குள" வாய்க்கால் புனரமைப்பு

(உடையார்கட்டு)

உடையார் கட்டுக்குளத்தின் பிரதான வாய்க்கால் உட்பட கிளை வாய்க்கால்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இரு தடவைகளுக்கு மேல் இந்தக் குளம் உடைப்பெடுத்து புனரமைப்பு செய்யப்பட்டு நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தற்பொழுது இப்பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மக்கள் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இக்குளம் கட்டப்பட்ட காலத்திலிருந்து வந்த வாய்க்கால் தற்போது பெருமளவு செலவில் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

# பரமர் சங்கமம்



'வட்டுக் கோட்டைக்கு வழிகேட் டால் துட்டுக்கு எட்டுக் கொட்டைப் பாக்கு' இந்தக் கூற்று ஈழம் வாழ் தமிழ் மக்களின் நிலைப்பு மற்றும் எதிர்காலச் சுபீட்சம் பற்றிக் கோடி காட்டுவதாகவே எனக்குத் தோன்றுகிறது.

ஆங்கிலேயரின் வருகைக்கு முன்பாக இலங்கையின் பலபாகங்களிலும் பரந்துவாழ்ந்த சிங்கள- தமிழ் மக்கள் குழுமங்குழுமங்களாக தன்னேச்சையாக வாழ்ந்து வந்தபோதும் இடையிடையே போரிட்டு வந்த வரலாறுகளும் சொல்லப்பட்டுள்ளன.

ஒரு குடையின் கீழே ஒன்றிணைத்துச் சுதந்திரத்தை வழங்கிச் சென்றவர்கள் அதனைச்சரியாக வழங்காத குறைபாட்டால் மூக்குள்ள வரை சளிபோகாதென இரு இனங்களுக்கும் இடையே முரண்பாடு தோன்றி இப்போ பொரும்பான்மை இனத்தின் கரத்தை மேலும் சர்வதேச நாடுகள் வலுப்படுத்தி உள்ளதாகவே காணப்படுகிறது.

சாத்வீகப் போராட்டங்களால் அணுகிய தமிழர்களின் விகிதாசார உரிமைகளை வழங்காமல் ஒப்பந்தங்களை பேரினத் தலைவர்கள் கிழித்து வீசியதால் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

அதனைப் பயங்கரவாதம் ஆகமுத்திரைகுத்தி அனைத்து கீழ மேலைத் தேசநாடுகள் இறக்கையை வெட்டி வீழ்த்தியும் ஆண்டுகள் நான்கை எட்டிப் பிடிக்கின்றன.

ஆயுதப் போராட்டத்துக்கு முன்பாக இருந்த நிலையிலிருந்து இன்னமும் இலங்கை அரசு இம்மியும் விட்டுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. ஐ.நா, ஜெனிவா கூட்டத் தொடர்களும் மர்மக் கதைகளைப் போல தொடர் விட்டுக் கொண்டுள்ளன.

இதனிடையே ஈழத்துத் தமிழ்ப் புத்தி ஜீவிகள் சிலர் நாடுகடந்த தமிழீழம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி பெயருக்கு பிரதமர் கடதாசிகளில் ஆட்சி, அறிக்கைகளை விட்டுக் கொண்டுள்ளார்.

அயல்க் கண்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் போக முடியாத இடத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள் எண்டால் மாணவர்களைக் கூடவா அந்த வழியில் அலைக்களிக்க வேண்டும்.

இந்தியாக் கண்டத்தில் தமிழை வளர்த்து முன்னெடுக்கிறார்களோ இல்லையோ தமிழ்ப்பெயரை வைத்துக் கொண்டியங்கும் அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து கூட்டமைப்பு எனப்பெயர் சூட்டி தமிழீழத்துக்காகப் போராடப் போவதாக அறிக்கை விட்டுள்ளனர்.

இதுகளெல்லாம் ஈழம் வாழ்கின்ற தமிழர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகோலுமா அல்லது இன்னுமின்னும் சிதைத்துப் போட்டு வடிவு பார்க்குமா?

வட்டுக்கோட்டையில் எழுபதுகளில் எடுத்த தீர்மானமே ஈழத்தமிழனுக்கு அரசியல் அதிகாரம் அல்லது பிரிந்து சென்று சுதந்திரமாக வாழ்கின்ற உரிமம் என்னும் ஆணித்தரமாக முகிழ்த்தது.

அதனைத் தொடர்ந்த கூட்டமைப்பினரின் இரத்தத்திலகம்; இரத்த ஆறு ஓட வழிவகுத்தது. குழுமங்குழுமமாகத் தமிழினம் பல கோஷங்களையும், வழிகளையும் தேர்வு செய்து திரிபுபட்டுள்ளன.

இல்லாத ஊரைச்சென்றடைவதற்கான முயற்சியைத்தான் 'வட்டுக்கோட்டைக்கு வழிகேட்டால் துட்டுக்கு எட்டுக் கொட்டைப் பாக்கு' எண்டனரோ என்னவோ சொல்லுங்க பாப்பம்...

# உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் நிரந்தர நியமனம் தொடர்பாக ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து கலந்துரையாடினர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு வருகை தந்திருந்த பிரதிநிதிகளுடன் மேற்படி விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

உடற்கல்வி டிப்ளோமா நெறியினைப் பூர்த்தி செய்த வடமாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் தமக்கான நிரந்தர நியமனங்கள் குறித்து அமைச்சரிடம் தெளிவுபடுத்தினர். இதன்போது, கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், நிரந்தர நியமனங்கள் தொடர்பாக துறைசார்ந்தோரிடம கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க பிரதிநிதிகள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்து தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்திற்கு வருகை தந்திருந்த பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, பயிற்சி மற்றும் விளையாட்டுக்களின் போது தாம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் அவர்களிடம் எடுத்து விளக்கினர். இதனிடையே மாவட்ட கூடைப்பந்தாட்டத்திற்கென தனியான ஒருமைதானத்தை அமைப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

இதில் கருத்துத்தெரிவித்த அமைச்சர் அவர்கள், குறித்த விடயங்கள் தொடர்பாக தாம் நேரில் ஆராய்ந்து உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

## யாழ்.இந்து மாணவனுக்கு ஜனாதிபதி சாரணர் விருது



சாரணர் இயக்கத்தின் அதி உயர் விருதான ஜனாதிபதி சாரணர் விருது இம்முறை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் சிவானந்தன் விஜிதரனுக்கு கிடைத்துள்ளது. இந்த விருதானது 10 ஆண்டுகளுக்கு பின்னர் கிடைத்துள்ளதாக கல்லூரி அதிபர் எஸ்.கணேசராஜா தெரிவித்துள்ளார்.

## கைதடிப் பாலத்தை அலங்கரிக்கும் "கட்டவுட்"

யாழ்ப்பாணம் ஏ9 பிரதான வீதியிலுள்ள கைதடிப் பாலத்தடியில் புதிய விளம்பர பதாதைகள் அலங்கரித்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள், வங்கிகள் என்பன நவீன காலத்திற்கேற்றவாறாக இந்தப் பதாதைகளை வைத்துள்ளன. பாரியவிளான இந்தப் பதாதைகள் மக்களை மிகவும் கவர்ந்ததுடன், இவை தொடர்பான விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் உதவுகின்றன.

# முரசின் இன்றைய பலன்

(24.04.2013 - புதன்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 11 ஆம் திகதி.
நட்சத்திரம் அத்தம் மாலை 06.06 வரை. திதி சதுர்த்தசி.
பின்னிரவு 03.51 வரை. இராகுகாலம் 12.00 - 01.30 வரை.
சுபநேரம் 04.30 - 06.00 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வாழ்வில் வளம் பெற, புதிய வாய்ப்பு வரும். முறையாக பயன்படுத்துவதால் நன்மை. தொழில், சீர்பெற முழுக வனத்துடன் பணிபுரிய வேண்டும். பொன் பொருள் சேர்க்கை யோகம். நண்பர்கள் விருப்பப்படி நடந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் பெருமை. |
| ரிஷபம் | பிறர் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தடைகள் விலகி, அனுகூல பலன். தொழில், நடைமுறை திருப்திகரமாகும். பணவரவில் முன்னேற்றம். வெளியூரிலிருந்து நல்ல செய்தி கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். |
| மிதுனம் | வழக்கத்திற்கு மாறான பணி, தொந்தரவு தரலாம். சிலர் சுயலாபத்திற்காக அணுகுவர். வேலையில் அதிக கவனம் கொள்வதால், சிரமம் தவிர்க்கலாம். குறைந்த பணவரவு. ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம். முன்பு பழகிய ஒருவருடன் சந்திப்பு. |
| கடகம் | மனதில் புதிய சிந்தனை உருவாகும். திட்டமிட்டு செயற்களில் அதிக நன்மை பெறுவீர்கள். தொழில், கூடுதல் மூலதனம் இட்டு செழிக்கும். அதிக இலாபம். இல்லறத்துணை அன்பில் மகிழ்வு. நண்பரிடமிருந்து எதிர்பாரா உதவி கிடைக்கும். |
| சிம்மம் | அக்கம் பக்கத்தவருடன் மனக்கிலேசம் ஏற்படலாம். பேசுவதில் நிதானம் வேண்டும். போட்டி இருக்கும். தொழிலில் உருவாகிற குறையை, தாமதமின்றி சரிசெய்வது நல்லது. அளவான பணவரவு. அதிக பயன்தராத பொருள் வாங்க வேண்டாம். |
| கன்னி | செயற்களில் வசீகரத்தன்மை நிறைந்திருக்கும். பலரும் மனமுவந்து பாராட்டுவர். தொழில், செழிக்க கிடைக்கிற நல்வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். உபரி பணவரவு. அறப்பணி செய்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு கலைஞர்களுக்கு உயர்ச்சி. |
| துலாம் | மனதில் சஞ்சலம் ஏற்படலாம். குடும்பத்தில் எவருடனும், வாக்குவாதம் கூடாது. தொழிலில், மாற்றங்கள் வேண்டாம். சேமிப்பு செலவுக்கு பயன்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம். தாய்வழி உறவிடமிருந்து ஆதரவு. ஓய்வும் நீண்ட உறக்கமும். |
| விருச்சிகம் | மறதியால் தர்மசங்கடம் உருவாகும். பொறுமையுடன் நடந்தால் நன்மை பெறலாம். தொழில், வளர்ச்சிப் பணிக்கு, காலம் தேவைப்படும். எதிர்பார்த்த வரவு இருக்கும். ஒவ்வாத உணவால் உடல் கெட நேரிடலாம். மனம்மகிழ நற்செய்தி ஒன்று வரும். |
| தனுசு | உங்கள் சிரமங்களை பிறரிடம் சொல்ல வேண்டாம். குடும்ப ஒற்றுமை வளர, அன்புடன் பேசுக. தொழில் சீர்பெற, தகுந்த முயற்சி செய்வீர்கள். பிறர் பார்வைக்காக செலவு செய்ய வேண்டாம். பிள்ளைகளைக் கடிய நேரும். இசை ரசித்து மனம் இலகுவாகும். |
| மகரம் | புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். நண்பர்களின் உதவி, ஊக்கம் தரும். தொழில், செழிக்க சில சீர்திருத்தம் செய்வீர்கள். வரவில் முன்னேற்றம். எதிரிகளால் இருந்த தொல்லை விலகும். உயர்வதற்கு வேண்டிய முயற்சி செய்வீர்கள். |
| கும்பம் | முன்னர் தவறானதை, புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். தனித்திறமையை நண்பர் பாராட்டுவர். தொழிலில், திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதலாக வேலை. எதிர்பார்த்த பணவரவு வரும். விருந்து, விசேஷத்தில் கலந்து கொள்வீர்கள். குடும்ப நிம்மதி. |
| மீனம் | மனதில் புதிய நம்பிக்கை ஏற்படும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், அபரிமிதமான முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரம். வெகுநாள் தேடியது கைவந்து சேரும். வழிபாடு. பிள்ளைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். |

ஒரு பெட்டியினுள் சிவப்பு நிறப்பேனாக்கள் 19 உம், கறுப்பு நிறப் பேனாக்கள் 28 உம், நீல நிறப்பேனாக்கள் 17 உம் இருந்தன.

1) சிவப்பு நிறப் பேனாக்களை விட, கறுப்பு நிறப்பேனாக்கள் எத்தனை கூடுதலாக உள்ளன?
   1) 9   2) 11   3) 13

2) பெட்டியினுள் இருந்த மொத்தப் பேனாக்கள் எத்தனை?
   1) 44   2) 59   3) 64

**பின்வரும் கூற்றுக்களில் ஒரு கூற்று மாத்திரம் சரியானது. அக்கூற்றைத் தெரிவுசெய்க.**

1) 1) 12 மணி நேரக் கடிகாரத்திலுள்ள நிமிட முள், ஒரு நாளில் 12 தடவைகள் சுற்றி வரும்
   2) ஒரு மணித்தியாலத்தில் 60 செக்கன்கள் உண்டு.
   3) ஒரு மீற்றரில் 100 சென்ரிமீற்றர்கள் உண்டு.

2) 1) பலா, மா, கொய்யா, அப்பிள் என்பன எமது நாட்டில் வளரும் பயிர்கள்.
   2) எமக்கு உப்பு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது.
   3) வட்டம், சதுரம், முக்கோணி, செவ்வகம் என்பன தள வடிவங்களாகும்.

**மூன்று அடைப்புக்களில் தரப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி விடையைக் கண்டுபிடியுங்கள்**


| A | A | A |
|---|---|---|
| ☐ அப்பிள் | ☐ கத்தரி | ☐ உழுந்துவடை |
| ☐ பிட்டு | ☐ மாம்பழம் | ☐ பூக்கோவா |
| ☐ கோவா | ☐ முள்ளங்கி | ☐ பலாப்பழம் |
| ☐ பாற்சோறு | ☐ இடியப்பம் | ☐ அன்னாசிப்பழம் |

1) இரு உணவு வகைகளைக் கொண்ட அடைப்பு எது?
   1) A   2) B   3) C

2) இரு பழ வகைகளைக் கொண்ட அடைப்பு எது?
   1) A   2) B   3) C

**உருவிலுள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்யுங்கள்**

1) 1) வெட்டுதல் வரைதல், எழுதுதல்
   2) எழுதுதல் வெட்டுதல் அணிதல்,
   3) வெட்டுதல், எழுதுதல், அணிதல்





# தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**சரி, பிழை இடுக**

1) வாய் ஓரங்களில் உணவுபடுமாறு உண்ணுதல் கூடாது ( )
2) வீட்டுத் தோட்டத்தில் புதிய காய்கறிகளைப் பெறலாம் ( )
3) எமது நாடு கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும் ( )
4) முஸ்லிம்கள் தைப்பொங்கலைக் கொண்டாடுவர் ( )
5) ஏனைய கொடிகளை விட தேசியக்கொடி உயரத்தில் பறக்க விடப்படும் ( )
6) சூரிய ஒளியில் மின்சாரம் பெறலாம் ( )
7) பகல் வானம் மிகவும் இருட்டாக இருக்கும் ( )
8) கிளி தனியாகத் திரியும் பறவை ( )
9) அணில் கூட்டமாக நடமாடும் ( )
10) இரவில் பாம்பு நடமாடும் ( )

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1) வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கும் நன்மை அல்லாதது எது?
   1) சேமிப்பு   2) புதிய காய்கறி   3) செலவு அதிகம்

2) ஒட்டுதல் மூலம் இனம் பெருக்கக்கூடிய தாவரம் எது?
   1) மிளகாய்   2) தோடை   3) வாழை

3) சூழலிற்கு முற்றிலும் தீங்கு ஏற்படுத்தாத போக்குவரத்துச் சாதனம் எது?
   1) சருருளி   2) பேருந்து   3) புகையிரதம்

4) 'நங்கூரம்' பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் எது?
   1) கார்   2) விமானம்   3) கப்பல்

**விடை எழுதுக**

1) அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்கள் எவை?
..............................................................
..............................................................

2) நுளம்புகளை ஒழிக்கக்கூடிய வழிமுறைகள் இரண்டு தருக.
..............................................................


3) முதலுதவிப் பெட்டிக்குள் காணப்படும் பொருட்கள் மூன்று தருக.
..............................................................


குமாரிடம் ஒரு தொகைப்பணம் உள்ளது. விமலிடம் குமாரை விட ரூபா 12 கூடுதலாக உள்ளது. இருவரிடம் உள்ள மொத்தப்பணம் ரூபா 172.00 ஆகும்.

1) குமாரிடம் இருந்த பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 92 2) ரூபா 86 3) ரூபா 80

2) விமலிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?
1) ரூபா 86 2) ரூபா 92 3) ரூபா 96

வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

3) 

4) 

5) 21 தொடக்கம் 25 வரை எண்ணும்போது, இலக்கம் இரண்டு எத்தனை தடவைகள் வரும்?
1) 4 2) 5 3) 6

6) 77 இல் எத்தனை ஏழு உள்ளது?
1) 2 2) 6 3) 11

7) கமலாவைவிட, அனுலாவின் நிறை 3 மடங்கு அதிகமாகும். இருவரினதும் மொத்த நிறை 32 கிலோகிராம் எனில், அனுலாவின் நிறை எவ்வளவு?
1) 8 Kg 2) 16 Kg 3) 24 Kg

பின்வரும் மூன்று அடைப்புக்களினுள் தரப்படும் சொற்களில் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லைக் கொண்ட அடைப்பைத் தெரிவு செய்யுங்கள்.

1)

| | | |
|---|---|---|
| • வடை<br>• பிட்டு<br>• இடியப்பம்<br>• உணவு | • நிலா<br>• அம்புலி<br>• சந்திரன்<br>• திங்கள் | • ஆசிரியர்<br>• தபாற்காரன்<br>• தச்சன்<br>• சிற்பி |

2)

| | | |
|---|---|---|
| • ஆடு<br>• மாடு<br>• எருமை<br>• குதிரை | • கட்டில்<br>• கதிரை<br>• மேசை<br>• கண்ணாடி | • தோழன்<br>• நண்பன்<br>• சிநேகிதன்<br>• பாங்கன் |

3) அருகில் தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி நேரம் எத்தனை மணியாக இருக்கலாம், எனக் கண்டுபிடியுங்கள்.



1) மு.ப 9.00 2) ந.ப. 12.00 3) பி.ப. 4.00




4) லவனின் சட்டைப் பையினுள் 7 நாணயக்குற்றிகள் இருந்தன. அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 22 எனில், பையினுள் இருந்த நாணயங்கள் எவை?

1) ரூபா 10 - 1, ரூபா 5 - 1, ரூபா 2 - 3, ரூபா 1 -2


2) ரூபா 10 - 1, ரூபா 5 - 2, ரூபா 2 - 3, ரூபா 1 -2

3) ரூபா 10 - 0, ரூபா 5 - 3, ரூபா 2 - 3, ரூபா 1 - 1


5) அரைவாசிக்கு நிழற்றப்பட்ட உரு எது?
1) 2) 3)



6) சதுரமுகி வடிவத்தை ஒத்த வடிவம் எது?
1) 2) 3)




7) அருகில் தரப்பட்டுள்ள உருவில் அமைக்கத் தேவையான செங்கற்கள் எத்தனை
1) 26 2) 27 3) 30



8)  அருகில் தரப்பட்டுள்ள உருவில் எத்தனை பக்கங்கள் உள்ளன?
1) 4 2) 5 3) 6

9) மூன்று வட்டம், இரண்டு சதுரங்கள், மூன்று முக்கோணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உரு எது?

1) 2) 3)



# ஐ.பி.எல். துளிகள்



186 ஓட்டங்கள் இலக்கு என்றாலே நிச்சயம் ஆட்டம் கடைசி ஓவர் வரை தான் செல் லும். பிராவோ கடைசியில் பிரமாதமாக ஆடி அசத்தி விட்டார். ஹசி, ரெய்னா நல்ல அடித்தளம் அமைத்துக்கொடுத்தனர். துடுப்பாட்டத்திற்கு சாதகமாக மைதானம் இருந்தது. சொந்த மண்ணில் வெற்றி பெறுவது மகிழ்ச்சியான விடயம் தான். ராஜஸ்தான் றோயல் அணி வீரர் வட்சன் ஆறா்வது ஐ.பி.எல். சீனனில் சதம் பெற்றமையை வாழ்த்துக்கின்றேன் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.



185 ஓட்டங்களைக் குவித்தும் தோல்வியை சந்தித்தது ஏமாற்றமாக உள்ளது. வட்சன் அருமையாக ஆடி சதம் அடித்தார். பந்து வீச்சில் ஆரம்பத்திலேயே சொதப்பி விட்டோம். விக்கெட்டுகள் வீழ்த்த வேண்டிய சமயங்களில் ஓட்டங்களை வாரி வழங்கிவிட்டோம். இதுவே சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடனான தோல்விக்கு அடிப்படையாக அமைத்துவிட்டது என ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.




தொடர்ந்தும் வரும் தொடரில் திறமையை நிரூபித்து அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கும் வகையில் ஆடுவேன். கடந்த இரு போட்டிகளில் தோல்வியடைந்தமை மிகுந்த ஏமாற்றம் அளிக்கின்றது. எமது அணியில் தரம் மிக்க வீரர்கள் பலர் உள்ளனர். உலகின் மிகச் சிறந்த கப்டனாக ஜொலித்த பொண்டிங் எமது அணிக்குத் தலைமை தாங்குவது மகிழ்ச்சி. அவரின் தலைமையின் கீழ் நான் விளையாடுவதை கௌரவமாகக் கருதுகின்றேன். என மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் ரோகித் சர்மா தெரிவித்தார்.



வெற்றிக்கு பங்களிப்புச் செய்ததில் மகிழ்ச்சி. தொடர்ந்து வரும் போட்டிகளிலும் எனது முழுப் பங்களிப்பையும் வழங்கி வெற்றிக்குத் துணைபுரிவேன். வட்சன் சதம் பெற்றமை மகிழ்ச்சி. அவர் சிறந்த வீரர். கப்டன் டோனி புத்திக்கூர்மை மிக்கவர். அவரின் முடிவுகள் சில வேளைகளில் அதிர்ச்சிமிகுந்ததாக இருக்கும் என சென்னை அணி வீரர் மைக்கல் ஹசி தெரிவித்தார்.

# காலிறுதியில் சானியா ஜோடி

(ஸ்டுட்கார்ட்)



ஸ்டட்கார்ட் ரென்னிஸ் கிராண்ட் பிரிக்ஸ் தொடரின் காலிறு திக்கு இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் பெதானி மேடக் சாண்ட்ஸ் ஜோடி முன்னேறியது.

ஜேர்மனியில் உள்ள ஸ்டட்கார்ட் நகரில் நடக்கும் இத்தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் சானியா, பெதானி மேடக் ஜோடி, ரஷ்யாவின் நடியா பெட்ரோவா, சுலோவானியாவின் கத்ரினா ஜோடியை எதிர் கொண்டது. டை-பிரேக்கர் வரை சென்ற இதன் முதல் சுற்றை 7-6 என கைப்பற்றிய சானியா ஜோடி, இரண்டாவது செட்டையும் 7-5 என வென்றது. முடிவில், இந்தியாவின் சானியா, அமெரிக்காவின் பெதானி மேடக் ஜோடி 7-6, 7-5 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறியது.

# உறுதியான முடிவு இல்லை


சென்னையில் இடம்பெறவுள்ள இறுதிக்கட்ட ஐ.பி.எல் போட்டிகளை இடம்மாற்றும் யோசனை தொடர்பாக இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பு (ஐ.பி.எல்.) உறுதியான முடிவெதனையும் எடுக்காது காத்திருக்க முடிவு செய்துள்ளது. இறுதிக்கட்டப் போட்டிகளுக்கு இன்னமும் ஒரு மாதத்திற்கும் மேலாக உள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வீரர்கள் சென்னையில் இடம்பெறும் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஐ.பி.எல். அமைப்பு அறிவித்ததைத் தொடர்ந்து சென்னையில் இடம்பெறும் போட்டிகளில் இதுவரை இலங்கை வீரர்கள் பங்குபற்றியிருக்கவில்லை.

குழுநிலைப் போட்டிகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், இறுதிப் போட்டிக்கான அணிகளைத் தெரியும் இறுதி 3 போட்டிகளில் 2 போட்டிகள் சென்னையில் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகள் சென்னையிலிருந்து இடமாற்றம் செய்யப்படும் என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டது.

எனினும், நேற்று முன்தினம் ஐ.பி.எல். அமைப்பின் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பான உறுதியான முடிவு எடுக்கப்படாததோடு, பொறுத்திருந்து பார்த்து முடிவெடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# புகழ் பாடுவோம்



சச்சின்!
சத்தியமாய்
சரித்திரம் காணாத
சாதனை நாயகன்!
நாற்திசையும்
“நான்குகள்” அடித்து
“ஆறுகள்” விளாசி
ஆயிரமாயிரம் இரசிகர்களின்
கிரிக்கெட் தெய்வம்
இவன்!
காண்கின்றான் இன்று
அகவை நாற்பது!
பாடுவோம் காலமெல்லாம்
இவன் நாமம் என
வாழ்த்துவோம் இரசிகர்கள் நாம்...

## இன்றைய ஆட்டம்




Season 6

IPL

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர்
மும்பை இந்தியன்ஸ்
இடம்: கொல்கத்தா
இரவு 8.00 மணி

# லண்டன் மரதன்
## எதியோப்பிய வீரர் தங்கம்

(லண்டன்)



லண்டன் மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில் எதியோப்பியா வீரரும், பெண்கள் பிரிவில் கென்ய வீராங்கனையும் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

லண்டன் மரதன் போட்டி பலத்த பாதுகாப்பு மத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் 35 ஆயிரம் வீர,வீராங்கனைகள் பங்குகொண்டனர்.

இதில் ஆண்கள் பிரிவில், எதியோப்பிய வீரர் செஜயே கெபதே 2 மணி 6 நிமிடம் 4 விநாடியில் பந்தய தூரத்தைக் கடந்து (42.16 கி.மீ.) சம்பியன் பட்டம் வென்றார்.


மகளிர் பிரிவில் கென்ய வீராங்கனை பிரிஸ்கா ஜெப்டு முதலிடம் பிடித்தார் (2 மணி 20 நிமிடம் 13 விநாடி). இதேவேளை, அமெரிக்காவின் பாஸ்டன் குண்டுவெடிப்பு சம்பவத்தில் இறந்தவர்களின் நினைவாக 30 விநாடிகள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கெய்ல் அதிரடியால் சுனாமி
## சிக்கிச் சிதறியது புனே வாரியர்ஸ்

கிறிஸ் கெய்லின் ஆக்ரோஷ அதிரடியால் புனே வாரியர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி சாதனைகளுடன் கூடிய வெற்றியைப் பதிவாக்கிக் கொண்டது. ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 31ஆவது போட்டி நேற்று பெங்களூரில் நடைபெற்றது. இதில் புனே வாரியர்ஸ் அணியும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புனே வாரியர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல், டில்சான் ஆகியோர் களமிறங்கினர். கிறிஸ் கெய்ல் என்ன நினைத்து களமிறங்கினரோ தெரியவில்லை. ஆரம்பம் முதலே சரவெடிபோல அதிரடியில் முழங்கத் தொடங்கினார். ஆரம்பம் தானே எப்படியாவது ஒரு பந்து வீச்சாளரைப் பயன்படுத்தி அதிரடியைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில் புனே அணிக் கப்டன் செயற்பட்டார். அவரின் திட்டப்படி பந்துவீச்சாளர்களை மாற்றி, மாற்றிப் பயன்படுத்தி கிறிஸ் கெய்லின் விளாசைக் கட்டுப்படுத்த முயற்சித்தார். ஆனால், தொட்டதெல்லாம் பொன்னானதுபோல கிறிஸ் கெய்லின் துடுப்பில் பட்டதெல்லாம் பவுண்டரிகளாகவும், சிக்ஸர்களாகவும் பறந்தன. வானவேடிக்கை காட்டி கிறிஸ் கெய்ல் சுனாமி போன்று உருவெடுத்தார். 30 பந்தில் சதம் கடந்தார். ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் வரலாற்றில் மின்னல் வேகத்தில் சதம் கடந்த யூசுப் பதானின் (37 பந்துகள்) சாதனையைத் தகர்த்தெறித்தார். துணைக்கு வந்த டில்சான் கிறிஸ் கெய்லின் ஆட்டத்தை இரசிக்க முடிந்ததே ஒழிய அவருக்கு துடுப்பாடும் வாய்ப்பு குறைந்த அளவிலேயே இருந்தது. தொடர்ந்து ஆறு பெருக்கெடுப்பது போல் உருவெடுத்த கிறிஸ் கெய்ல் அதிரடியை ஒரு முனையில் தொடர்ந்து வெளிப்படுத்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை மலைபோல உயர்த்தினர். ஒருபுறம் விக்கெட்டுக்கள் சரிக்கப்பட்டபோதும் மறுபுறத்தில் கிறிஸ் கெய்லின் அதிரடியைக் கட்டுப்படுத்த புனே வாரியன்ஸ் அணியால் முடியவில்லை. கிறிஸ் கெய்லுக்கு இணையாக என்னால் ஆட முடியும் என சிறிது நேரம் டிவில்லியர்ஸ் தாக்குப் பிடித்து அசத்தினார். இறுதி வரை கிறிஸ் கெய்லுடன் மல்லுக்காட்டி புனே வாரியர்ஸ் அணி, ஐ.பி.எல். அரங்கில் புதிய சாதனைகள் பல உருவாக வழிசெய்ததே ஒழிய அதன் திட்டம் எல்லாம் தவிடுபொடியனாது. அல்லது கிறிஸ் கெய்லால் தவிபொடியாக்கப்பட்டது. இறுதியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றது. இது ஐ.பி.எல். அரங்கில் ஒரு அணி பெற்ற அதிககூடிய ஓட்ட எண்ணிக்கையாகப் பதிவாகியது. இதில் 66 பந்துகளை எதிர்கொண்ட கிறிஸ் கெய்ல் 17 சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 175 ஓட்டங்களைப் பெற்றார். ஐ.பி.எல். அரங்கில் ஒரு இனிங்ஸில் தனி நபர் பெற்ற அதிக ஓட்டம், ஒரு இனிங்ஸில் ஒருவரால் அடிக்கப்பட்ட அதிக சிஸ்கர் போன்ற சாதனையை நேற்றைய போட்டியின் மூலம் கிறிஸ் கெய்ல் படைத்தார். ஆறாவது தொடரின் அதிக (432) ஓட்டம் என்ற சிறப்பையும் பெற்றார். மற்றும் டிவில்லியர் எட்டு பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 31, டில்சான் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு இமாலய இலக்கு நோக்கிய ஆடிய புனே வாரியர்ஸ் அணி களமிறங்கியது. செய் அல்லது சொத்து மடி என்ற நிலையில் ஆடு களத்தில் சுழன்ற துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டைப் பறிகொடுக்க முடிந்தது. ஒரு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டபோதும், ஓரளவிற்கேனும் ஸ்மித், மார்ஷ் தாக்குப் பிடித்து ஆடியனர். இது புனே வாரியர்ஸ் அணி இறுதி வரை களத்தில் நிலைத்து நிற்க துணை புரிந்தது. இறுதியில் புனே வரியார்ஸ் அணி 20 நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் ஸ்மித் 41, மார்ஷ் 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிறிஸ்கெய்ல், ராம்போல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக கிறிஸ்கெய்ல் தெரிவானார்.

# இஸ்ரேலுக்கு நவீன ஆயுதங்கள்; ஒப்பந்தம் செய்தது அமெரிக்கா



அமெரிக்க பாதுகாப்பு மந்திரி சக் ஹெகல் இஸ்ரேல் நாட்டின் ஜெருசலம் நகருக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அங்கு பேசிய ஹெகல் கூறியதாவது,

இஸ்ரேலுக்கு அதிநவீன ஏவுகணைகள், ஜெட் போர் விமானங்கள் ஆகியவை வழங்கவுள்ளோம். பக்கத்து நாடுகளுடன் பிரச்சினைகளை சந்தித்து வரும் இஸ்ரேலுக்கு மிக பக்கபலமாக இருக்கும்.

குறிப்பாக அணு ஆயுதங்களை ஈரான் பெருக்கி வரும் நிலையில், நட்பு நாடான இஸ்ரேலுக்கு உதவும் நோக்கில் இந்த ஒப்பந்தம் செய்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

இராணுவ மந்திரியாக பொறுப்பேற்று முதலாவதாக அரேபிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சக்ஹெகல் இஸ்ரேல், ஐக்கிய அரேப் எமிரேட், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளுடன் 100 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆயுத ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்.

# தடைகளால் தடுமாறுகிறது ஈரான்

# பொருட்களின் விலை உச்சத்தில்

(டெஹ்ரான்)

சர்வதேச பொருளாதாரத் தடையால், ஈரானில உணவுப் பொருட்கள் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.

இதனால் பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி, ஈரான் அணு ஆயுதச் சோதனையில் ஈடுபட்டு வந்தது. இதையடுத்து, அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது.

ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்கும் நாடுகளின் கப்பல்களுக்கு காப்புறுதி செய்யப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது பொருளாதாரத் தடையால் ஈரானில் உணவுப் பொருட்களின் விலை பல மடங்கு உயர ஆரம்பித்துள்ளது. குறிப்பாக சமையல் எண்ணெய், முட்டை, இறைச்சி, பழங்கள் உள்ளிட்டவற்றின் விலை 60 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக, தலைநகர் டெஹ்ரானில் இருந்து வெளியாகும், கேஹன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் வரும் ஜுன் 14 ஆம் திகதி அதிபர் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், உணவுப் பொருட்களின் விலை அதில் எதிரொலிக்கும் என்று அப்பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளது.



முன்பு ஒரு அமெரிக்க டொலருக்கு 12, 260 ரியால்கள் கொடுக்கப்பட்டுவந்தது.

ஆனால், பொருளாதாரத் தடைக்குப் பின்னர் நிலைமை மாறி விட்டதால் தற்போது ஒரு டொலரை பெற 24,500 ரியால்கள் கொடுக்கப்படுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# மீண்டும் விஷவாயுத் தாக்குதல்; 74 மாணவிகள் மயக்கம்

ஆப்கானிஸ்தானில், பெண்கள் பாடசாலை மீது, தலிபான்கள், விஷ வாயுத் தாக்குதல் நடத்தியதில், 74 மாணவியர் மயக்கமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில், தலிபான்கள் ஆட்சியில் இருந்த போது, பெண்களுக்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகளை விதித்தனர். பர்தா அணியாமல் வீட்டை விட்டுச் செல்லக் கூடாது. பாடசாலைகளுக்குச் செல்லக் கூடாது உள்ளிட்ட தடைகள், அமுலில் இருந்தன.

அமெரிக்க தாக்குதலுக்குப் பின், தலிபான்கள் ஆட்சி ஒழிக்கப்பட்டு, ஹமீத் கர்சாய் தலைமையில், ஜனநாயக ஆட்சி நடக்கிறது. இருப்பினும், தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள தகார் உள்ளிட்ட மாகாணங்களில், பெண்கள் பாடசாலை செல்வதற்கு எதிர்ப்பு காணப்படுகிறது. பெண்கள் பாடசாலைகள் மீது, தலிபான்கள் தாக்குதல் நடத்துவதால், 550 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால், மூன்று இலட்சம் மாணவியர் பாதிக்கப்பட்டுள்ளனர். தகார் மாகாணத்தின், தலுகான் நகரில், தடையை மீறி செயல்பட்ட பாடசாலைகள் குடிநீர்த் தொட்டியில் கடந்த



ஆண்டு, விஷம் கலக்கப்பட்டதில், 700 மாணவியர் பாதிக்கப்பட்டனர். இதேபோல ஆண்கள் கற்கும் பாடசாலைகளிலும், கடந்த ஆண்டு, விஷம் கலக்கப்பட்டதில், 200 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இதற்கிடையே தலுகான் நகரில், பீவி ஹாவா உயர்நிலை பாடசாலையில், கடந்த, 18 ஆம் திகதி நச்சுப் புகை பரவியது. இதை சுவாசித்த மாணவியர் பலர் மயக்கமடைந்தனர். 74 மாணவியர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தரையிறக்கப்பட்ட ஹெலி தலிபான்களிடம் சிக்கியது



துருக்கியைச் சேர்ந்த பயணிகள் ஹெலிகொப்டரில் இருந்த 11 பேரை ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் சிறை பிடித்துச் சென்றுள்ளனர்.

துருக்கியைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆப்கானிஸ்தானில் கோஸ்ட் நகரில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பணிகளை மேற்பார்வையிட அதன் அதிகாரிகள் குழு கோஸ்ட் நகருக்குச் சென்றுவிட்டு காபூலுக்கு ஹெலிகொப்டரில் திரும்பிக் கொண்டிருந்தது.

அப்போது அஸ்ரா மாவட்டத்தில், கடும் சூறைகாற்றும், பலத்த மழையும் பெய்ததால், ஹெலிகொப்டர், ஒரு கிராமத்தில் அவசரமாக தரையிறங்கியது. இதையடுத்து அந்த ஹெலிகொப்டரைச் சூழ்ந்த தலிபான்கள் அதில் இருந்த 11 பேரையும் சிறைபிடித்துச் சென்றுள்ளனர்.

புங்குடுதீவு ஸ்ரீ இரா ராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகை அம்மன்) தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 2013












# வாழ்வும் வளமும் எமது மக்களுக்காகவே

(யாழ்ப்பாணம்)

தீயசக்திகள் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட முயன்றால் அத்தகைய வழியில் நாமும் பதிலளிக்கத்தயங்கமாட்டோம் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் உரும்பிராய் மேற்கு, ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமுக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் சனசமூக நிலையத் தலைவர் பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றபோதே நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில இச்சனசமூகநிலையமானது பல இடையூறுகளுக்கு மத்தியில் 60 ஆண்டுகளைக் கடந்துள்ளதுடன், தொடர்ந்தும் சனசமுக நிலையத்தின் பணி தொடர வாழ்த்துவதோடு எமது மக்களின் சுபீட்சமான வாழ்விற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் செயறபடும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் இச் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்தும் ஒத்துழைப்பினை வழங்குவோம்.

நாம் என்றும் மக்களுக்காக உழைப்பவர்கள் - மக்களுக்காக வாழ்பவர்கள். நாம் விழ விழ எழுந்து, எரிந்த சாம்பலில் இருந்து மீண்டெழும் பீனிக்ஸ் பறவைகள் போல எமது மக்களின் எதிர்காலத்திற்காக தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம். சரியான பாதையில் சரியான வழிமுறையில் செயற்பட்டு வருகின்றோம்.

இருப்பினும் சில புல்லுரிவித்தனமான அரசியல்வாதிகள் உசுப்பேத்தும் வகையிலான நடவடிக்கையில் ஈடுபட்டு மக்களின் இயல்பு வாழ்வினை சிதைத்து விட முயன்று வருகின்றார்கள். எனவே இவ்வாறான வன்முறைக்கு காரணமானவர்கள் யார்? அவற்றை தூண்டுபவர்கள் யார்? என்பதை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். தீயசக்திகள் மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விடமுயன்றால் அத்தகைய வழியில் நாமும் பதிலளிக்கத் தயங்கமாட்டோம் எனத் தெரிவித்தார்.

முன்பதாக சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி வைத்தீஸ்வரம் எனும் வைரவிழா சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டிய வீர,வீராங்கனைகளுக்கான பரிசில்களை நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் வழங்கிவைத்தனர்.

## கிங்ஸ் லெவன் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று டில்லி பெரோஸ் ஷா கோட்ளா மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் டில்லி டேர்டெவில்ஸ்-கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி, டில்லி அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

உள்ளூர் இரசிகர்களின் ஆரவார வரவேற்புடன் களமிறங்கிய டெல்லி அணி நிதானமாக ஆடியது. முதல் ஓவரில் ஒரே ஒரு பவுண்டரி மட்டுமே அடித்த ஆரம்ப வீரர் ஜெயவர்தன, பிரவீன் குமாரிடம் விக்கெட்டை இழந்தார். அடுத்து வந்த மெர்வ், 8 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தார்.

அதன்பின்னர் மேன் சேவாக்குடன், வார்னர் இணைய, ஆட்டம் விறுவிறுப்பானது. ஆனால், அவர்களின் ஓட்ட எண்ணிக்கையை பஞ்சாப் பந்து வீச்சாளர்கள் வெகுவாகக் கட்டுப்படுத்தினர். 21 பந்துக்களில் 2 பவுண்டரி ஒரு சிக்சருடன் 23 ஓட்டங்கள் எடுத்த சேவாக்கை, ஹர்மீத் சிங் ஆட்டமிழகச் செய்தார். அதன் பிறகும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

ஜுனேஜா (14 ஓட்டம்), ஜாதவ (ஓட்டம் இல்லை), போத்தா (1) 89 ஓட்டங்களுள் 6 விக்கெட்டுகள் இழந்த நிலையில், மறுமுனையில் விக்கெட்டைக் காப்பாற்றப் போராடிய டேவிட் வார்னர் 36 பந்துகளில் 40 ஓட்டங்களைச் சேரத்து ஆறுதல் அளித்தார். அவரது விக்கெட்டை பிரவீன்குமார் கைப்பற்றினார். இதனால் டில்லி அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 120 ஓட்டங்கள் எடுத்தது. பஞ்சாப் அணி தரப்பில் ஹர்மீத் சிங் 3 விக்கெட்டுகளும், பிரவீன்குமார் 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

இதையடுத்து 121 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பஞ்சாப் அணி ஆடிவருகிறது. தொடக்க வீரரான கப்டன் கில் கிறிஸ்ட் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றத்துடன் திரும்பினார். பஞ்சாப் அணி 17 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 121 ஓட்டங்களை பெற்று வெற்றியைத் தனது வசமாக்கியது.

## குடும்பஸ்தர் சடலம் மீட்பு

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு கிராமத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று காலை 9.00மணியளவில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது அதே இடத்தைச் சேர்ந்த பூ.தவபாலசிங்கம் (வயது-42) என்பவரே சடலமாக மீட்கப் பட்டுள்ள்ார். முல்லைத்தீவு பொலிஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். (125)

### வடக்கில் முஸ்லிம்...

குடியேற்றிவிட்டே வடமாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என எமது கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய வை.எல்.எஸ்.ஹமீட், வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் முன்னர் புத்தளம் மாவட்ட வாககளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் 2010 ஆம் ஆண்டுக்கு பின்னர் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதனால் இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை எங்கும் இல்லை. இவ்வாறான நிலையில் தேர்தல் நடத்தினால் இந்த மக்கள் வாக்களிக்க முடியாமல் போகும். இதனாலேயே வடக்கில் முஸ்லிம்கள் பூரணமாக மீள்குடியேற்றப்படாமல் வடமாகாண சபை தேர்தல் நடத்தப்படுவதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம்.

இதேவேளை, பொது பல சேனவை விட மிகவும் மோசமான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக வடமாகாணத்தில் செயற்படுகின்றது. பொது பலசேன அறிக்கைகளுடன் மாத்திரம் நின்று விடுகின்றனது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயல் ரீதியாக ஈடுபடுகின்றனர் என்றார்.

### மக்களின்...

இதனிடையே மக்கள் ஒன்றிணைந்த ஆதரவை எமக்கு தரும் பட்சத்தில் யுத்தத்தால் அழிவடைந்த வடபகுதியை மீளவும் கட்டியெழுபபி சொர்க்கபுரியாக மாற்றியமைப்போம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. எனவே மக்கள் சரியான வழியை தெரிவு செய்வதன் மூலமே இது சாத்தியமாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் வடமாகாண சபை தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? அல்லது சேர்ந்து போட்டியிடுவதா? என்பது குறித்து இது வரையில் நாம் தீர்மானிக்கவில்லை. இப்போது அதுவல்ல பிரச்சினை எமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு திடமானதொரு அத்திவாரமிடுவதே காலத்தின் கட்டாயமாகும்.

மாகாணசபையை நாம் வென்றெடுக்கும் பட்சத்தில் எமது மக்களின் சகலவிதமான பிரச்சினைகள் மற்றும் தேவைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணமுடியுமென்றும் தெரிவித்தார். இதனிடையே அங்கு பிரதிநிதிகளால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் அமைச்சர் அவர்கள் இதன்போது பதிலளித்தார்.

### வடக்கில் மாகாணத்...

வீரவன்ச தெரிவித்துள்ளார். வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவது இரண்டாம் ஈழ செயற்பாட்டை ஆரம்பிக்கும் திட்டமாக அமையும் என்றுதான் கருதுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லை கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மின்கட்டண உயர்வு குறித்து அவர் கருத்து வெளியிடுகையில், இலங்கை மின்சார சபை நட்டத்தை ஈடுசெய்ய மின்கட்டண உயர்வு அரசாங்கத்திற்கு இலேசான பதிலாக இருக்கின்ற போதும் மக்களுக்கு அது கடினமானது என தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு முன்கூட்டியே தீர்வுகாண வாய்ப்பிருந்ததாக அவர் சுட்டிக் காட்டினார். மொத்த பிரச்சினைகளுக்கு தீர்வினை காணாது ஒருநாள் பிழைப்பிற்கு தீர்வினை காண செயற்பட்டதால் மின் கட்டண பிரச்சினை உக்கிரமடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். மின்சாரத்துறை முழுமையாக அரசு அதிகாரத்தின் கீழ கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அதிக மின்சாரம் பயன்படுத்தப்படும் காலத்தில் அதிக கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

### கூட்டமைப்பு...

சுத்த அடாவடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், காணிகளுக்குச் சொந்தமான மக்கள் அதற்கான ஆவணங்களுடன் இருக்கையில் அவர்களுடைய காணிகளைப் பறித்து பெரும்பான்மையின மக்களுக்கு கொடுக்கும் அரசாங்கத்தை இங்கு மட்டுமே காண முடியும் எனவும் அவர் சாடியுள்ளார்.

வலி. வடக்கில் உரிமை உறுதிப்படுத்தப்படாத நிலங்களை படையினர் அபகரிக்கப் போவதாகவும், அதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்படப் போவதாகவும் அறிகிறோம். ஏற்கனவே இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் அந்தப் பிரதேசத்தை வைத்துக் கொண்டு காணிகளை சுவீகரிக்கப் போவதாகவும், அதற்கான அறிவித்தல்கள் ஒட்டப்படப் போவதாகவும் குறிப்பிடுவது, சுத்த அடாவடித்தனமான அல்லது ஏமாற்றுத்தனமான நடவடிக்கை என்பதை நாம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றோம். இவ்வாறான சம்பவம் வேறு ஒரு ஜனநாயக நாட்டிலும் நடந்திருக்காது, நடக்கவும் மாட்டாது. இதேபோல் வவுனியா-பேயாரி குளம் பகுதியில் 56 ஆவது படையணிக்கு படைமுகாம் அமைப்பதற்காக மக்களுடைய காணிகள் பிடுங்கப்படுகிறது. இதற்காக மக்கள் குடியிருக்கும் வீடுகளுக்கும் கூட கடிதங்கள் அனுப்பப்பட்டு மக்களை வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலைதான் யாழ்ப்பாணத்திலும், முல்லைத்தீவிலும், மன்னாரிலும், வவுனியாவிலும், கிளிநொச்சியிலும் நடக்கின்றது, நடக்கப்போகின்றது. எனவே இதனை சாதாரணமாக விட்டுவிட முடியாது. இது ஒரு குடும்பத்தின் அல்லது சில நபர்களின் பிரச்சினை அல்ல. இது எங்கள் இனத்தின் பிரச்சினை. இதனை தொடர்ந்தும் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டோம். இவ்வாறான சம்பவங்களுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

### இலங்கையில்...

தெரிவித்துள்ளார். பக்கச் சார்பற்ற செய்திகள் மக்களை சென்றடைவதற்கு தடைகள் ஏற்படுத்தப்படக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 2012 நவம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளின் போதும் இது குறித்து பிரித்தானியா வலியுறுத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பான விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டுமென பிரித்தானியா கோரியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், குறித்த பிரதிநிதியின் விஜயத்தை இலங்கை அனுமதிக்க மறுத்து விட்டதாக அவர் கவலை தெரிவித்துள்ளார்.

### நாடாளு...

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற அமர்வுகளை சீர்குலைக்க முயற்சிப்பதாக அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று பிற்பகல் 1.00 மணி வரையில் ஒத்தி வைக்கப்பட்டது.

### கச்சேரி...

போராட்டத்தினைத் தமது கட்சி முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்ததுடன் முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் செயலாளர், செல்வராசா கஜேந்திரனும் பங்கேற்றிருந்தார். அங்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில்,

வலி. வடக்கில் பொதுமக்களது காணிகளைப் பறிக்க அரசு சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கென கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசு வெளிப்படையாக ஆரம்ப நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

எனவே ஒட்டுமொத்தமாக வடபகுதியில் இந்த காணி சுவீகரிப்பு விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் ஒன்றிணைவதனையே தமது கட்சி விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இன்றைய போராட்டம் ஒரு ஆரம்பப் புள்ளியாக அமையும் என்று தாம் எதிரபார்ப்பதாகவும் இதற்கு அனைத்துப் பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பையும் உதவியையும் நாடி நிற்பதாகவும் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் வலி. வடக்கின் முககியத்துவம் குறித்து விளங்கிக் கொள்ள வேண்டும். விவசாய நடவடிக்கைகளுக்கு வலி. வடக்கு மண்தான் சிறந்தது. யாழ். குடாநாட்டின் பொருளாதாரத்தில் வலி. வடக்கில் இருந்து கணிசமான பங்களிப்பு செய்யப்படுகின்றது. இருபது வருட யுத்தம் காரணமாக பொதுமக்கள் இந்தக் காணிகளில் இருந்து வில கியே இருக்கவேண்டிய நிலை உள்ளது. இதேபோன்று கடல் தொழில நடவடிக்கைகளும் இவவாறேயுள்ளது.

இவை யாழ். குடாநாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் வலி. வடக்கில் மயிலிட்டிப் பிரதேசம் தென்னாசியாவிலேயே மீன்பிடிக்குச் சிறந்த பிரதேசம். அவ்வாறு மக்களது பிரதேசம் சுவீகரிக்கப்பட்டு அந்தப் பிரதேச மக்களின் தொழில் துறையை அழிக்கும் ஒரு நடவடிக்கையாகவே தமது கட்சி இதனை நோக்குவதாகவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# பகிடிவதை புரிந்தால் பல்கலை அனுமதிக்கு ஆப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் புதிய மாணவர்களுக்கு பகிடிவதை மேற்கொள்ளும் அனைத்து சிரேஷ்ட மாணவர்களினதும் உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தவறு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் பகிடிவதையை மேற்கொள்ளும் மாணவர்களின் உறுப்புரிமை நான்கு அல்லது ஐந்து வருடங்கள் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பகிடிவதைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன குறிப்பிட்டுள்ளார். தற்போது நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களில் புதிய கல்வியாண்டுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையில் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இது தொடர்பில் விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

பெரும்பாலான பல்கலைக் கழங்களில் பகிடிவதை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் சில பல்கலைக்கழங்கங்களில் இடைக்கிடை இவ்வாறான சம்பவங்கள் பதிவாவதாக அவர் குறிப்பிட்டார். ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்கள் சிலர் பகிடிவதை மேற்கொண்டதாக தகவல்கள்கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரத்ன மேலும் கூறியுள்ளார்.

# வடக்கு நோக்கி இரயில் பாதை

## பணிகள் முழுவீச்சில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை நோக்கிய புகையிரத பாதை அமைக்கும் பணியானது முழுவீச்சில் நடைபெறுகிறது. தற்பொழுது ஓமந்தை புகையிரத நிலையம் வரை தினமும் ரயில்சேவை நடைபெறுகின்றது. ஓமந்தை ரயில் நிலையத்தில் இருந்து 6 கிலோமீற்றர் நீளமான பாதைக்கு கொங்கிறீற் சிலிப்பர் கட்டைகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரையான ரயில் பாதையில் உள்ள பாலங்கள் புனரமைப்புப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ள. ஓமந்தை தொடக்கம் கிளிநொச்சி வரையான பாதை கிரவல் பறித்து கருங்கல்லு சல்லி போட்டு வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது.

மேலும் பரந்தன் சந்தியில் இருந்து ஆனையிறவு வரையான பகுதி மிதிவெடி அகற்றும் பணி நடைபெறுவதனால் சற்றுத் தாமதமாகவே வேலைகள் ஆரம்பிக்க இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (130)

# வியட்நாமுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் வியட்நாம் நீதி அமைச்சர் ஹா ஹுங் சவுங் ஆகியோருக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை நேற்று முன்தினம் செய்து கொள்ளப்பட்டதாக வியட்நர்ம் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இலங்கையில் இடம்பெற்று வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு வியட்நாம் நீதி அமைச்சர் இதன்போது பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அணிசேரா அமைப்பு என்பவற்றுடன் இணைந்து செயற்படும் விதம் குறித்து இங்கு கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. சட்ட தகவல் அலுவல்கள் ஆசிய கருத்துக்களத்தில் பங்குபற்றுவது குறித்து இலங்கை, வியட்நாம் நாடுகள் இணைந்து செயற்படுவது என இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை, வியட்நாம் நாடுகள் சட்டமன்ற, நிர்வாக மற்றும் நீதித்துறை விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவது என்ற உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# வலுவடையும் உறவுப் பாலம்



(கொழும்பு)

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு ஆதரவு வழங்கபடும் என பங்களாதேஷ் உறுதியளித்துள்ளது. உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷிடுல் கேக் நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு நடத் தினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிபபிட்டார். மனித உரிமைகள் தொடர்பில் நாம் எமது இலங்கை சகோதரர்களுக்கு உறுதுணையாக இருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைவதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம உட்பட பலர் கலந்து கொண்டனர்.


# உடனடி வேலைவாய்ப்பு

தினமுரசு காரியாலய இயந்திரப் பகுதியில் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. SORD, KORD அச்சு இயந்திரங்களை இயக்கக் கூடிய அனுபவமுள்ளவர்கள் மற்றும் பழக விருப்பமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு


# மின் கட்டணச்சுமையை தவிர்ப்பது எப்படி?

(கொழும்பு)

வீட்டு மின்பாவனை பொருட்களில் அதிகளவில் மின்சாரத்தை உள்வாங்கும் பொருளாக குளிர்சாதனப் பெட்டி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணப் பட்டியலில் 50 சதவீதமான தொகையை குளிர்சாதனப் பெட்டியே பெறுவதாக மாற்று சக்தி வலு அதிகார சபையில் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எம்.எம்.ஆர். பத்மசிறி தெரிவித்துள்ளார்.

குளிர்ச்சாதன பெட்டியினால் ஏற்படும் செலவீனத்தை மட்டுப்படுத்திகொள்ள, தேவையற்ற பொருட்களை அதனுள் களஞ்சியப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன்; தேவையற்ற மின் விளக்குகள், மின்விசிறி என்பவற்றை நிறுத்தி வைப் பதைவிட, மின்சாரக் கட்டணப்பட்டியலுக்கு அதிகம் தாக்கம் செலுத்தும் மின்பாவனைப் பொருட்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது சிறந்ததாக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, உயர்வடைந்துள்ள மின்சாரக் கட்டணம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் தமது நிலைப்பாட்டை அறிவித்தது.

# தீயில் கருகிய பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீ விபத்தொன்றில் எரிகாயங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி அங்கு மரணமடைந்துள்ளனர்.

நாரந்தனை மத்திய ஊர்காவற்றுறையைச் சேர்ந்த றூட்டையா மெத்தலீன் (வயது-56) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி தீ விபத்து ஒன்றில் எரிகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக மேலும் தெரியவருகின்றது. (பா)

# முட்டி மோதும் வாகனங்கள் கைதடியில் இது வழமையா?





படம் : இராஜ்

# கணனிக்குள் தங்கம்

கொழும்பில் இருந்து இந்தியாவிற்கு தங்கம் கடத்திய திருகோணமலை பகுதியைச் சேர்ந்த முகம்மது ரியாஸ் (வயது-32) என்பவர் கைது செய்யப்பட் டுள்ளார். விமானம் மூலம் நேற்று அதிகாலை இவர் சென்னை சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் இறங்கியபோது அவர் வைத்திருந்த மடிக்கணினி மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதை வாங்கி பார்த்த போது வழக்கத்துக்கு மாறாக அதிக எடையுடன் காணப்பட்டது.

எனவே, மடிக்கணினியை திறந்து பார்த்தனர். அப்போது தங்க பிஸ்கட்டுகளை தகடாக மாற்றி மடிக்கணினியில் வைத்து கடத்தி வந்தது தெரியவந்தது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.